# சேலம் மாநகராட்சி

**2022ஆம் ஆண்டு மே மாதம் 25ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்றக்கூடத்தில் மாநகராட்சி சட்டம் அட்டவணை 1, பத்தி 3(1)ன் கீழ் சேலம் மாநகராட்சியின் இயல்புக்கூட்டம் நடைபெறும்.**

---

## பொருள்கள்

**1)** சேலம் மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட கோட்டம் 35ல் தம்பி காளியம்மன் கோவில் தெருவில் ஸ்மார்ட் சாலை பகுதி–9 திட்டத்தினை செயல்படுத்திட மதிப்பீடு ரூ.2.00 கோடிக்கு தயார் செய்யப்பட்டு ஸ்மார்ட் சிட்டி நிர்வாக குழுவின் அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் சென்னை நிர்வாக அனுமதி மற்றும் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி பெற்று பணியினை நிறைவேற்ற 02.12.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பபந்ததாரர் திருவாளர்கள். கணேசன் கான்ராக்ட் கம்பெனி, சேலம் நிறுவனத்தின் விலைகுறைப்பிற்கு பிந்தைய தொகை ரூ. 1,76,95,444/–க்கு மன்ற தீர்மான எண் 252 நாள் 09.12.2020ம் தேதிய அனுமதியுடன் 14.12.2020ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டது.

பணிகள் நடைபெற்று வரும் போது அசல் மதிப்பீட்டில் உள்ள கீழ்கண்டுள்ள இனங்களின் அளவுகள் கூடுதலாக சேர்த்து செய்தால்தான் பணிகள் முழுமையாக நிறைவேறும் என்பதால் இதற்கான உரிய மாற்றங்கள் மேற்கொண்டு பாதாளசாக்கடை திட்டத்தை நிறைவேற்றிட உயர் அலுவலர்கள் ஆய்வின் போது அறிவுறுத்தப்பட்டது.

<u>வடிகால் மேல் இரும்பினால் ஆன மூடிகள், ( MS.Grill Door for drainage Open)</u>

பணிக்கான அசல் மதிப்பீட்டில் கான்கிரீட்டால் மூடப்பட்டுள்ள வடிகால் மேல் ஒருசில இடங்களில் மட்டும் திறந்து சுத்தம் செய்திடும் வகையில் இரும்பினால்செய்யப்பட்ட மூடி வைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. பணி இடத்தில் உள்ள தெருக்களில் நெருக்கமான குடியிருப்புகள் உள்ளதாலும் சிறிய சிறிய கிளை சந்துகளில் அதிக எண்ணிக்கையிலான வீடுகள் உள்ளதாலும் அனைத்து வீடுகளுக்கும் தற்போது பாதாள சாக்கடை வீட்டிணைப்பு குழாய் மற்றும் 24/7 குடிநீர் இணைப்பு குழாய்கள் அமைக்கப்பட்டு வடிகாலின் குறுக்கே கடந்து

தொடர்ச்சி..

வருவதால் கான்கிரீட் கொண்டு மூடினால் பழுது ஏற்படும் சமயத்தில் கான்கிரீட்டை உடைத்து எடுத்து பின்னரே சரிசெய்ய இயலும் என்பதால் பிற்கால பராமரிப்பு செய்திட ஏதுவாக இரும்பு மூடிகள் பொருத்திட அப்பகுதி பொதுமக்கள் மற்றும் அப்பகுதி முக்கிய பிரமுகர்கள் கோரிக்கை வைத்ததால் அசல் மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட கூடுதலாக ஆகிறது. இது பொதுமக்களுக்கும் பிற்கால பராமரிப்புக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் இதனை சேர்த்து ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகைக்குள் செய்திட ஆய்வின் போது உயர் அலுவலர்களால் அறிவுரை பெறப்பட்டது.

<u>பெயின்டிங்</u>

மேற்கண்டுள்ளவாறு இரும்பு மூடிகள் கூடுதலாக பொருத்தப்படுவதால் இதற்கான வர்ணம் பூசும் பணி கூடுதலாக சேர்த்து செய்து முடிக்க வேண்டியுள்ளது. எனவே அசல் மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட கூடுதல் அளவுகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

<u>வடிகால் அமைத்தல் (Driange )</u>

மேற்படி சாலை தாழ்வான பகுதியாக உள்ளதால் அம்மாபேட்டையினை சுற்றியுள்ள பகுதியில் சிறிய மழை பெய்தால் கூட அனைத்து மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்லும் துணைவடிகாலாக உள்ளதால் வடிகால் அடிக்கடி நிரம்பி சாலையில் மழைநீர் செல்கிறது இதனால் சாலையும் பழுதடைவதுடன் பொதுமக்களும் சிரமத்துக்குள்ளாகிறார்கள். எனவே அப்பகுதி பொதுமக்கள் மற்றும் அப்பகுதி முக்கிய பிரமுகர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் ஆய்வின் போது தெரிவித்துள்ள அறிவுரைகளின் படி வடிகால் கட்டுமானத்தின் நீளத்தினை அதிகரித்து அருகில் உள்ள பெரிய வடிகாலுடன் சேர்த்தால் மழைநீர் சாலையில் வராமல் சென்று விடும் என்பதால் இடத்தின் தன்மையினை கருதியும் வடிகாலை கூடுதல் நீளத்திற்கு அமைத்து கழிவுநீர் தேங்காமல் வெளியேரும் வண்ணம் அமைக்கப்பட வேண்யுள்ளதால் அசல் மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட கூடுதல் அளவுகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மேலும் அசல் மதிப்பீட்டில் உள்ள கீழ் கண்டுள்ள இனங்களில் இடத்தின் தன்மைக்கேற்ற கூடுதல் அளவுகள் சேர்த்து பணி மேற்கொள்வதால் ஆகும் கூடுதல் செலவு தொகை, மதிப்பீட்டில் Lump Sum Amount மற்றும் சில இனங்களின் அளவுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மதிப்பீட்டு சேமிப்பு தொகையில் இருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகைக்கு உட்பட்டு பணி மேற்கொள்ளவும், கூடுதல் அளவுகளை திருவாளர் கணேசன் கான்ராக்ட் கம்பெனி சேலம் நிறுவனத்தினர் ஏற்கெனவே ஒப்பந்ததத்தில் குறித்துள்ள கீழ்கண்டுள்ளவாறு அதே விலை விகிதத்தில் பணியினை நிறைவேற்றி தருவதாக சம்மத கடிதம் கொடுத்துள்ளார்கள்.

தொடர்ச்சி..

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டில் உள்ள அளவு | | மதிப்பீட்டு தொகை ரூ | செய்து முடிக்கப்பட்ட அளவு | கூடுதலாக செய்யப்பட்ட அளவுகள் | கூடுதல் செலவு தொகை ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Dismantling, clearing away Reinforced Cement Concrete | m3 | 7 | 5291.00 | 8.97 | 1.97 | 10423.27 |
| 2 | Earth work excavation for foundation in hard stiff clay, stiff black cotton, hard red earth and refilling the sides of foundation with excavated earth - Storm Water Drain | m33 | 840 | 116.00 | 1295.20 | 455.20 | 52803.2 |
| | a). Upto 1.00m | m2 | 355 | 362.00 | 707.75 | 352.75 | 127695.5 |
| 3 | Providing and laying in position, standardised concrete mix M-20 grade in accordance with IS 456-2000, using 20mm and below graded hard granite stone jelly for all RCC items of works a). Foundation Basement | m3 | 431 | 7139.00 | 634.71 | 203.71 | 1454285.69 |
| 4 | Suppling and fabricating and placing in position MS (or) R.T.S. bar for reinforcement to all RCC works as per the design given | Qtl | 429.2 | 7337.00 | 440.93 | 11.73 | 86063.01 |
| 5 | Conveyance of excavated excess earth away from the site to 2 Km | m3 | 280 | 62.00 | 735.12 | 455.12 | 28217.44 |
| 6 | Supplying and Fixing of Ms Grill | kg | 2040 | 84.00 | 9700.00 | 7660.00 | 643440 |
| 7 | Supplying and Fixing of 110mm PVC Pipe | RM | 27 | 181.00 | 28.75 | 1.75 | 316.75 |
| 8 | Painting Two Coats of Enamel paint | m2 | 45 | 127.00 | 187.82 | 142.82 | 18138.14 |
| 9 | Painting Two Coats of Emulsion paint | m2 | 77 | 206.00 | 109.21 | 32.21 | 6635.26 |
| | | | | | | Total | 2428018.26 |

தொடர்ச்சி..

அட்டவணையில் கண்டுள்ள இனங்கள் செய்வதால் ஏற்படும் கூடுதல் செலவினமானது ஏற்கெனவே இப்பணிக்கு நிர்வாக அனுமதி பெற்றுள்ள மொத்த தொகை ரூ **2.00** கோடிக்குள் அடங்கும் என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரும் நோக்கில் கூடுதல் அளவுகளை உட்புகுத்தி பணியினை நிறைவேற்றி முடித்திட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :–

1) அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி அசல் மதிப்பீட்டில் உள்ள பணிக்கு அப்பகுதி பொதுமக்களின் நலலுக்காக அவசியமான இனங்கள் கூடுதலாக சேர்த்து பணியினை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளை அனுமதித்து அங்கீகரிக்கலாம்.
3) கூடுதல் செலவின தொகையினை மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள மொத்த நிர்வாக அனுமதி தொகைக்குள் வருவதால் அனுமதிக்கலாம்.

(SSCL/9560/2020)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2,3 அனுமதிக்கப்பட்டது.

2) சேலம் மாநகராட்சி சீர்மிகு திட்டத்தின்கீழ் 3MW சூரிய ஒளி உதவியுடன் மின் உற்பத்தி செய்யும் சூரிய மின்னாக்கி பொருத்தும் பணி முந்தைய எருமாபாளையம் குப்பை கிடங்கில் உத்தேசிக்கப்பட்டு இதற்கான பிரேரணை சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநகரத்தில் DO1/32459/2017, 23.12.2019ம் தேதியில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

நிர்வாக அங்கீகாரம் பெறும் சமயத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநகரத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட பிரேரணையில் 5 வருட செயலாக்கம் மற்றும் பராமரிப்பிற்கான இனத்தினை தவிர்த்து மீதமுள்ள பணிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

தற்போது தேதிய உயர் மட்டக் குழுவில் அனுமதி பெற்று மாற்றியமைக்கப்பட்ட செட்டிசாவடி உரக்கிடங்கின் ஒரு காலி இடம் தேர்வு செய்யப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இவ்விடம் மாநகராட்சி எல்லைக்கு அப்பால் சுமார் 10Km தொலைவிலும் முந்தைய குப்பைக் கிடங்கின் ஒரு பகுதியில் அமையப்பெற்றுள்ளது. மேற்படி இடம் Remote Place ஆகவும் பாதுகாப்பு குறைவாகவும் உள்ளது. மேற்கண்ட இடத்தில் சூரிய மின்னாக்கி

தொடர்ச்சி..

(3MW) அமையப் பெற்றவுடன் அவ்வப்போது சோலார் தகடுகள் மேலே உள்ள கண்ணாடி பகுதிகள் சுத்தம் செய்வது, அந்த பகுதியில் உள்ள மின்இணைப்புகள், தீயணைப்பு தடுப்பு பணிகள் சரிபார்ப்பது மற்றும் இதர முன்னேற்பாடுகள் செய்வது போன்ற பணிகள் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

1) எனவே 5 வருடத்திற்கான O&M செலவினத்தை சீர்மிகு நகரத் திட்டத்தின் A&OE நிதியிலிருந்து செலவிட வழிவகை செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.
2) செட்டிச்சாவடி குப்பை கிடங்கின் ஒரு பகுதியில் அமையப்பெற்றுள்ள 3MW Solar Power Plant பகுதிக்கு சுழற்சி முறையில் காவலர்கள் மற்றும் மின்பணியாளர்கள் நியமனம் செய்ய மன்றத்தின் மாண்புமிகு மேயர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1) அங்கீகரிக்கலாம்.
2) சூரிய ஒளி மின்னாக்கி அமையப்பெற்றால் மாநகராட்சியின் மின்சார உபயோகம் செலவு கணிசமாக குறையும். மேலும் சமர்ப்பித்துள்ள மதிப்பீட்டில் O&M வழிவகையினை தவிர்த்து அங்கீகாரம் வழங்கப்பட்டதினால் இப்பணியினை தனியாக சீர்மிகு நகரத்திட்டத்தில் மேற்கொள்ள மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**(SSCL/14737/2019)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு **1, 2** அங்கீகரிக்கப்பட்டது.

**3)** சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டல அலுவலகம், கோட்டம் எண். 23, முல்லை நகர் சாய்பாபா கோவில் அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடத்தில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் பேவர் ப்ளாக் தளம் அமைக்கும் பணி (Construction of Storm Water Drain and Culvert at Mullai Nagar Main Road and Paver Block Flooring at Mullai Nagar Sai Baba Kovil Near in Division No.23 of Suramangalam Ward office.) நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புறம்) 2021 – 2022 கீழ் மேற்கொள்ள, (அரசாணை G.O.(MS)No.71 Date : 13.09.2021)-ன்படி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது.

தொடர்ச்சி..

அதன்படி கோட்டம் எண். 23, முல்லை நகர் சாய்பாபா கோவில் அருகில் உள்ள மெயின் ரோட்டில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் பேவர் ப்ளாக் தளம் அமைக்கும் பணி (Construction of Storm Water Drain and Culvert at Mullai Nagar Main Road and Paver Block Flooring at Mullai Nagar Sai Baba Kovil Near in Division No.23 of Suramangalam Ward office.) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.8.30 இலட்சத்தில் 33 சதவிகிதம் பங்களிப்பு தொகையினை ஸ்ரீ சீரடி சாய்சேவா டிரஸ்ட், முல்லை நகர் சேலம், அவர்கள் பின்னர் வழங்குவதாக ஒப்புக்கொள்ளப்பட்டதின் பேரில் மீதமுள்ள 67 சதவிகிதம் மாநில அரசின் நிதி பங்களிப்புடன் மேற்படி திட்டத்தை செயல்படுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மதிப்பீட்டிற்காக தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் உரிய நிர்வாக அனுமதி பெறவும், நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் தொழில் நுட்ப அனுமதி பெற்று பணி நிறைவேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள மாமன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிகளை மேற்கொள்ள தேவையான நிதியினை 33 சதவிகிதம் பங்களிப்பு தொகையினை ஸ்ரீ சீரடி சாய்சேவா டிரஸ்ட், முல்லை நகர் சேலம், அவர்கள் வழங்குவதாக ஒப்புக்கொள்ளப்பட்டதின் பேரில். மீதமுள்ள 67 சதவிகிதம் மாநில அரசின் நிதி பங்களிப்புடன் பணியினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் உரிய நிர்வாக அனுமதி பெறவும், நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் தொழில் நுட்ப அனுமதி பெறவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் பணிநிறைவேற்ற மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் அனுமதிக்கலாம்.

**(E3/NNT/ 6520/ 2022)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2,3 அனுமதிக்கப்பட்டது.

4) சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.25ல் துரைசாமி நகர் பகுதியில் 24 X 7 மணி நேரமும் குடிநீர் விநியோகம் செய்திட ஏதுவாக 10-இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் பணியினை சேலம் ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக

தொடர்ச்சி..

இயக்குநர் அவர்களின் செயல்முறைக் கடிதம் Roc No.2228 / 2020 / AMRUT-1 நாள்:**19.11.2021**ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் கடிதம் எண். Roc No.4588 / 2020 / DO1நாள்:**23.11.2021**ன்படி மதிப்பீடு தொகை ரூ.**8.20** கோடிக்கு தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டு, இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் L1 ஒப்பந்ததாரர் Mr. Sre. MCM & Co, Contractor, Salem-10 அவர்களுக்கு **20.01.2022** அன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

இந்நிலையில் மேற்படி பணிக்கு தெரிவு செய்யப்பட்ட இடத்தில் உள்ள பழுதடைந்த பயனற்ற பழைய சமுதாயக் கூடக் கட்டுமானத்தினை இடித்து அப்புறப்படுத்தவும், இப்பணியினை ஏற்கனவே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் Mr. Sre. MCM & Co, Contractor, Salem-10 அவர்களால் செய்திடவும், இப்பணிக்கான செவினத் தொகை ரூ.**1.50** இலட்சத்தை மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியிலேயே உள்ள L S தொகையிலிருந்து ஈடுசெய்து கொள்ளவும் மேலும், பழைய கட்டுமானத்தை இடிக்கும்போது மறு உபயோகப்படுத்தும் நிலையில் உள்ள கதவு, ஜன்னல் போன்றவற்றை எடுத்து அளவீடு செய்து ஏலம் விட்டு அதனை மாரகராட்சி கணக்கிற்கு கொண்டுவர மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :–</u>

அ) அனுமதிக்கலாம்.

ஆ) மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் ஒப்பந்ததாரர் Mr. Sre. MCM & Co, Contractor, Salem-10 அவர்கள் மூலமாகவே பழைய பயனற்ற கட்டுமானத்தை இடித்து அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்ளவும், அதன்மூலம் கிடைக்கும் மறுஉபயோகப் பொருட்களை ஏலம்விட்டு நடவடிக்கை மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி பணி நிறைவேற்ற மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளை அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

இ) மேற்காணும் செலவினத்தை ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் மேற்படி பணிக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதியின் L S தொகையிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(SSCL / 5877/ 2022)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அ, ஆ, இ அனுமதிக்கப்பட்டது.

5) சேலம் மாநகராட்சியின் சூரமங்கலம் வார்டு அலுவலகம் சம்மந்தப்பட்ட நரசோதிப்பட்டி நாளங்காடி சுங்க கட்டண வசூல் குத்தகை இனத்திற்கு 29.04.2022–ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு உச்சகேள்வி கோரியவர்களின் விபர பட்டியல் கீழ்க்கண்டவாறு உள்ளது.

நரசோதிப்பட்டி நாளங்காடி சுங்க கட்டண வசூல் (வார அடிப்படை) :

| வ. எண் | பெயர் / முகவரி | முன்வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திரு.எல்.தங்கவேல் த/பெ.லட்சுமணன், 2/323–ராம்நகர், சொர்ணபுரி, சேலம் – 636 004. | ரூ. 2,00,000/– DD -016578 EMD –016579 Date - 28.04.22. | ரூ.32,500/– | கடந்த மூன்று ஆண்டு சராசரி மதிப்பை விட ரூ.2,25,379/– குறைவு. |
| 2 | திரு.எஸ்.ரவிகுமார் த/பெ. சுப்ரமணி, 310, குள்ளகவுண்டர் தெரு, ரெட்டியூர், சேலம் – 636004. | ரூ. 2,00,000/– DD -016575 EMD –016576 Date - 28.04.22. | ரூ.38,850/– | கடந்த மூன்று ஆண்டு சராசரி மதிப்பை விட ரூ.1,05,728/– அதிகம். |

''நரசோதிப்பட்டி நாளங்காடி சுங்க கட்டண வசூல்'' குத்தகை இனத்திற்காக டெண்டரில் மொத்தம் இரண்டு நபர்கள் உரிய பிணை வைப்புத் தொகைகளை செலுத்தி கலந்து கொண்டார்கள்.

சம்மந்தப்பட்ட குத்தகை இனத்திற்கு கடந்த மூன்று ஆண்டிற்கான சராசரி குத்தகைதொகை மதிப்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ.19,20,022/– ஆகும். மேற்கண்ட பட்டியலின்படி இந்த இனத்திற்கு தற்போது திரு.எஸ்.ரவிகுமார் த/பெ. சுப்ரமணி என்பவர் ரூ.38,850/–க்கு (வார அடிப்படை) உச்சகேள்வி கோரியுள்ளார். இத்தொகை மூன்றாண்டு குத்தகைதொகையின் சராசரி வார மதிப்பை விட ரூ.28/– அதிகமாகவும், மூன்று ஆண்டு சராசரி மதிப்பை விட ரூ.1,05,728/– அதிகமாகவும் உள்ளது.

மேற்குறிப்பிட்ட விபரங்களின்படி வரிசை எண்.2–ல் உள்ள திரு.எஸ்.ரவிகுமார் த/பெ. சுப்ரமணி என்பவர் உச்சக்கேள்வியாக மூன்றாண்டு சராசரி குத்தகைதொகையை விட அதிகமாக கோரியுள்ளதால் நரசோதிப்பட்டி நாளங்காடி சுங்க கட்டண வசூல் (வார அடிப்படை) இனத்திற்கு முன்வைப்புத்தொகை செலுத்தி பொது ஏலம் டெண்டரில் கலந்து கொண்டு உச்சக்கேள்வி கோரியுள்ள திரு.எஸ்.ரவிகுமார் த/பெ. சுப்ரமணி என்ற குத்தகைதாரருக்கு 01.05.2022 முதல் 30.04.2025 வரையிலும், மேலும் அவர்களது சம்மதத்தின் அடிப்படையில் முதலாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து இரண்டாம் ஆண்டிற்கும், இரண்டாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து மூன்றாம் ஆண்டிற்கும், குத்தகை தொகை நிர்ணயம் செய்து குத்தகை உரிமம் 01.05.2022 முதல் வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1. அனுமதிக்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி மேற்கொண்ட நடவடிக்கைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கே1/416/2021)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

**6)** நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் **09.10.2017** ஆம் தேதிய ஆய்வுக் கூட்ட அறிவுரைகளின்படி சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் விதமாக ஏடிஸ் கொசுக்களை கட்டுப்படுத்துதல், கொசு புழுக்களை கண்டறிந்து அழித்தல் போன்ற டெங்கு நோய் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்ள **300** வீடுகளுக்கு ஒரு DBC பணியாளர் வீதம் **700** பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திட அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் நோய் தடுப்பு பணிக்கு தேவையான காலங்களில் DBC பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் **2022** ஏப்ரல் மாதத்தில் இருந்தே வெப்ப சலனத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலங்களினால் அவ்வப்போது தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மேலும் ஜுன் மாத ஆரம்பத்தில் தென்மேற்கு பருவமழை துவங்கும் என்பதால், டெங்கு கொசுப்புழு வளர் நிலைகள் அதிகரித்து, டெங்கு கொசுப்புழு அதிகரித்து, டெங்கு காய்ச்சல் கண்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க, டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளவேண்டியுள்ளது. இதற்கு வாரத்தில் **6** நாட்களுக்கு ஒரு நாளைக்கு **50** வீடுகள் வீதம் **300** வீடுகளுக்கு ஒரு DBC களப்பணியாளர் வீதம் பணியாளர்களை நியமிக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு துணை இயக்குநர், சுகாதார பணிகள், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.**199**/இ**5**/**2020** நாள்: **09.05.2022** ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில், ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.எப்**1**/**14094**/**2021** நாள்:**30.03.2022** ல் டெங்கு மற்றும் கோவிட் நோய் தடுப்பு அத்தியாவசிய பணிகளுக்காக **01.04.2022** முதல் நியமிக்கப்பட்டுள்ள **200** பணியாளர்கள் உட்பட கீழ்கண்டவாறு மொத்தம் **700** DBC பணியாளர்களை நியமிக்க வேண்டியுள்ளது.

| வ.எண். | வார்டு அலுவலகம் | **01.06.2022** முதல் நியமிக்கப்பட வேண்டிய DBC பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **1.** | சூரமங்கலம் வார்டு அலுவலகம் | **175** |
| **2.** | அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் | **175** |
| **3.** | அம்மாபேட்டை வார்டு அலுவலகம் | **175** |
| **4.** | கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் | **175** |
| | மொத்தம் | **700** |

மேற்கண்ட **700** DBC பணியாளர்களை **01.06.2022** முதல் **31.08.2022** வரை நாள் **1** க்கு ரூ. **319/–** தினக்கூலி வீதம் சுயஉதவி குழு உறுப்பினர்களை தற்காலிகமாக பணியில் அமர்த்திடவும், அதற்குரிய தொழிலாளர் நல வருங்கால வைப்பு நிதி (EPF) பணி வழங்குவோர் பங்களிப்புத் தொகையினை மாநகராட்சி சார்பில் வழங்கிடவும் அதற்காகும் செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

அனுமதிக்கலாம்.

**(எப்1/14094/2021)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

7) சேலம் மாநகராட்சி 92.14 ச.கி. பரப்பளவில் நான்கு மண்டலங்களாகவும், 60 கோட்டங்களாகவும் உள்ளன. 2022ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கீட்டின்படி 9,66,191 மக்கள் தொகையையும் 2,34,624,குடியிருப்புகளையும் 25,457 வணிக நிறுவனங்களையும் உள்ளடக்கிய ஒன்றாகும். மேலும், இம்மாநகருக்கு வெளியூர்களிலிருந்து தினசரி சுமார் 1 இலட்சம் மக்கள் வந்து செல்கின்றனர். தற்போது மாநகராட்சி எல்லைக்குள் தினசரி 550 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உருவாகிறது. மேற்படி திடக்கழிவுகளை சேகரித்து நுண்ணுயிர் உர தயாரிப்பு மையத்திற்கு கொண்டு செல்ல முதல்நிலை சேகரிப்பில் 141 இலகு ரக வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளது.

இந்த வாகனங்களுக்கென்று தனியாக ஓட்டுநர் பணியிடம் தோற்றுவிக்கப்படாததால் திடக்கிழிவு மேலாண்மை பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தற்காலிக தூய்மை பணியாளர்களை ஓட்டுநர்களாக நியமித்து 141 இலகு ரக வாகனங்கள் இயக்கப்பட்டு வருகிறது. அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை நாள்: 30.04.1997 ன் படி சேலம் மாநகராட்சிக்கு மொத்தம் 2957 தூய்மை பணியாளர்கள் தேவைப்படும் நிலையில், 992 நிரந்தர தூய்மை பணியாளர்கள் மற்றும் 1023 தற்காலிக சுயஉதவிக் குழு தூய்மை பணியாளர்கள் என மொத்தம் 2015 தூய்மை பணியாளர்கள் மட்டுமே பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனவே, தூய்மை பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ள நிலையில், இவர்களைக் கொண்டு இலகு ரக வாகனங்களை இயக்கி வருவதால் திடக்கழிவு அகற்றும் பணிகளில் சுணக்கம் ஏற்பட்டு வருகறது.

எனவே, மேற்படி 141 இலகுரக வாகனங்களையும் இயக்கிட ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியாக ஓட்டுநர்கள் தேவைப்படுவதால், ஓட்டுநர்களுக்கென்று தனியாக சுயஉதவி குழுக்கள் அமைத்து, அவற்றின் மூலமாக 141 ஓட்டுநர்கள் மற்றும் இருப்பில் 9 ஓட்டுநர்கள் சேர்த்து 150 ஓட்டுநர்களை 01.06.2022 முதல் 31.08.2022 வரையுள்ள 3 மாத காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்ததவும், அதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் 2021–22 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.635/– என்ற அடிப்படையில் வழங்கிடவும், இதற்கான செவினங்களை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

அனுமதிக்கலாம்.

(எப்1/7814/2022)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**8)** சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் **2022** ஏப்ரல் மாதம் முதல் வெப்ப சலனம் காரணமாக ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலங்களினால் அவ்வப்போது தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மேலும் ஜூன் மாத ஆரம்பத்தில் தென்மேற்கு பருவமழை துவங்க உள்ளதால், டெங்கு கொசுப்புழு வளர் நிலைகள் அதிகரித்து, டெங்கு கொசுப்புழு உற்பத்தி அதிகமாகி, டெங்கு காய்ச்சல் கண்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க, டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளவேண்டியதின் அவசியம் கருதி உடனடியாக நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு துணை இயக்குநர், சுகாதார பணிகள், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.**199**/இ**5**/**2020** நாள்: **09.05.2022**ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில், இம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தீவர டெங்கு தடுப்பு மற்றும் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்காக **2022–23** ஆம் ஆண்டிற்கு டெமிபாஸ் எமல்சிபையபுல் **50** % EC, (Temephos Emulsifiable 50% EC)-1000 லிட்டர்/கிலோ, பைரித்ரம் **2** % EC (Pyrethrum 2% Extract)-1000 லிட்டர்/கிலோ, மஸ்கிடோ லார்விசைட் ஆயில் (MosQuito Larvicide Oil)-5250லிட்டர்/கிலோ ஆகிய இராசாயனங்களை கொள்முதல் செய்து வழங்குமாறு மலேரியா பிரிவு சுகாதார ஆய்வாளர்களின் குறிப்பு நாள்:**16.05.2022** ல் தெரிவிக்கப்பட்டதின் பேரில், கீழ்கண்ட விபரப்படியான இராசாயனங்களை கொள்முதல் செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

| வ. எண். | இராசாயனம் | தேவை அளவு லிட்டர்/கி.கி. | விலை 1லி/கி.கி ரூ. | 18% GST | மொத்தம் ரூ. | மதிப்பீடு (ரூ.இலட்சம்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | டெமிபாஸ் எமல்சிபையபுல் 50 % | 1000 | 693.50 | 124.83 | 818.33 | 8.18 |
| 2. | பைரித்ரம் 2 % EC | 1000 | 1008.00 | 181.44 | 1189.44 | 11.90 |
| 3. | மஸ்கிடோ லார்விசைட் ஆயில் | 5250 | 85.00 | 15.30 | 100.30 | 5.27 |
| | | | | | மொத்த மதிப்பீடு | 25.35 |

மேற்கண்ட வரிசை எண். **1** மற்றும் **2** ல் கண்டுள்ள விபரப்படி டெமிபாஸ் எமல்சிபையபுல் **50**% , பைரித்ரம் **2** % EC இராசாயனங்களை தமிழ்நாடு மருத்துவ வாணிபக் கழகம், சென்னை நிறுவனத்தின் கடிதம் எண்.003/M(P)/INSECT-LARVI/TNMSC/**2020** நாள்:**31.12.2021**ல் குறிப்பிடப்பட்ட குறைந்த விலைப்புள்ளி விலைக்கு நேரடியாக கொள்முதல் செய்யவும், வரிசை எண். **3** ல் கண்டுள்ள மஸ்கிடோ லார்விசைட் ஆயிலுக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி விலை நாளது வரை TNMSC நிறுவனத்தால் நிர்ணயம் செய்யப்படாததால், டெங்கு நோய் தடுப்பு பணிகளின் அவசர அவசியம் கருதி எண்ணெய் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ**25.35** க்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

அனுமதிக்கலாம்.

**(எப்1/2621/2019)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**9)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். **25897/2021**/SBM, நாள்.**09.11.2021** மற்றும் **17.11.2021** ல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதங்களில் தெரிவிக்கப்பட்டதின்பேரில், தூய்மை இந்தியா இயக்கம் **2.0** திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ள City Sanitation Action plan & City Solid Waste Action Plan ஆகியவற்றை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

அதன்பேரில், **26.02.2022** ம் தேதிய தூய்மை இந்தியா திட்டம் **2.0**, **2** வது மாநில உயர்மட்டக் குழு கூட்ட நடவடிக்கைகளின் படி, பார்வை **1** ல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் சேலம் மாநகராட்சியில் கீழ்கண்ட விபரப்படி தனிநபர் கழிப்பறை, சமுதாய கழிப்பகம், பொது கழிப்பகம், சிறுநீர் கழிப்பகம் ஆகியவற்றை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தனிநபர் கழிப்பறை அமைக்க ஒன்றிய அரசின் பங்குத்தொகை, மாநில அரசின் பங்குத்தொகை மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பங்குத்தொகை போக பயனாளிகளின் பங்குத் தொகைக்கு வங்கிகள், நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றிடமிருந்து சமூக பொறுப்பு நிதி திட்டத்தின் கீழ் உரிய தொகையை பெற்றிட நடவடிக்கை மேற்கொள்ளவும், சமுதாய கழிப்பகம், பொது கழிப்பகம், சிறுநீர் கழிப்பகம் ஆகியவற்றை அமைக்க ஒன்றிய அரசின் பங்குத்தொகை, மாநில அரசின் பங்குத்தொகை போக மீதம் உள்ள தொகையை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பாக கொண்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், உரிய அதிகார அமைப்பிடம் நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. <u>தனிநபர் கழிப்பகம்:</u>

| குறியீட்டு எண்ணிக்கை | ஒரு அலகு மதிப்பீடு ரூ. | மொத்த மதிப்பீடு (ரூ.லட்சம்) | ஒன்றிய அரசு பங்களிப்பு தொகை (ரூ.லட்சம்) | மாநில அரசு பங்களிப்பு தொகை (ரூ.லட்சம்) | உள்ளாட்சி பங்களிப்புத் தொகை (ரூ.லட்சம்) |
|---|---|---|---|---|---|
| **229** | **30000** | **68.70** | **9.16** | **6.11** | **6.11** |

2. <u>சமுதாயக் கழிப்பகம்:</u>

(ரூபாய் லட்சத்தில் )

| இடங்கள் எண்ணிக்கை | சமுதாயக் கழிப்பகம் | | சிறுநீர் கழிப்பகம் | | மொத்த மதிப்பீடு | ஒன்றிய அரசு பங்களிப்பு தொகை | மாநில அரசு பங்களிப்பு தொகை | உள்ளாட்சி பங்களிப்பு தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | இருக்கை எண்ணிக்கை | மதிப்பீடு | இருக்கை எண்ணிக்கை | மதிப்பீடு | | | | |
| **4** | **64** | **96.00** | **12** | **3.84** | **99.84** | **31.68** | **21.12** | **52.80** |

தொடர்ச்சி..

3. <u>பொதுக் கழிப்பகம்:</u>

(ரூபாய் லட்சத்தில் )

| இடங்கள் எண்ணிக்கை | பொதுக் கழிப்பகம் | | சிறுநீர் கழிப்பகம் | | மொத்த மதிப்பீடு | ஒன்றிய அரசு பங்களிப்பு தொகை | மாநில அரசு பங்களிப்பு தொகை | உள்ளாட்சி பங்களிப்பு தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | இருக்கை எண்ணிக்கை | மதிப்பீடு | இருக்கை எண்ணிக்கை | மதிப்பீடு | | | | |
| 3 | 42 | 105 | 12 | 3.84 | 108.84 | 34.65 | 23.10 | 51.09 |

4. <u>சிறுநீர் கழிப்பகம்:</u>

| இடங்கள் எண்ணிக்கை | இருக்கை எண்ணிக்கை | ஒரு இருக்கை மதிப்பீடு ரூ. | மொத்த மதிப்பீடு (ரூ.லட்சம்) | ஒன்றிய அரசு பங்களிப்பு தொகை (ரூ.லட்சம்) | மாநில அரசு பங்களிப்பு தொகை (ரூ.லட்சம்) | உள்ளாட்சி பங்களிப்புத் தொகை (ரூ.லட்சம்) |
|---|---|---|---|---|---|---|
| 11 | 64 | 32000 | 20.48 | 6.76 | 6.11 | 9.21 |

மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 ன் கீழ் சேலம் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள மெக்கானிகல் ரோடு ஸ்வீப்பிங் மெஷின் 3 எண்ணிக்கையில் கொள்முதல் செய்திட பார்வை 2 ல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் கீழ்கண்ட விபரப்படி நிதி ஒதுக்கீடு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.

5. மெக்கானிகல் ரோடு ஸ்வீப்பிங் மெஷின் :

| எண்ணிக்கை | மொத்த மதிப்பீடு (ரூ.லட்சம்) | ஒன்றிய அரசு பங்களிப்பு தொகை (ரூ.லட்சம்) | மாநில அரசு பங்களிப்பு தொகை (ரூ.லட்சம்) | உள்ளாட்சி பங்களிப்புத் தொகை (ரூ.லட்சம்) |
|---|---|---|---|---|
| 3 | 90.00 | 22.50 | 14.40 | 53.10 |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள விபரப்படி தனிநபர் கழிப்பறை அமைக்க தகுதியான பயனாளிகளின் பட்டியலை தேர்வு செய்து பணி ஆணை வழங்கி, பணிகளை மேற்கொள்ளவும், சமுதாய கழிப்பிடம், பொதுக்கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பகம் அமைக்கும் பணிகள் மற்றும் மெக்கானிகல் ரோடு ஸ்வீப்பிங் மெஷின் கொள்முதல் செய்யும் பணி ஆகியவற்றிற்கு திட்ட மதிப்பீடுகளுடன் முன்மொழிவுகள் அனுப்பி வைத்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறவும், நிர்வாக அனுமதி பெற்ற பின்னர் தொழில் நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

அனுமதிக்கலாம்.

**(எப்1/7679/2022)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**10)** சேலம் மாநகராட்சி 92.14 ச.கி. பரப்பளவில் நான்கு மண்டலங்களாகவும், 60 கோட்டங்களாகவும் செயல்பட்டு, 2,34,624 குடியிருப்புகளையும் 25,457 வணிக நிறுவனங்களையும் உள்ளடக்கிய ஒன்றாகும். மேலும், இம்மாநகருக்கு வெளியூர்களிலிருந்து தினசரி சுமார் 2 இலட்சம் மக்கள் வந்து செல்கின்றனர். இம் மாநகராட்சியின் மக்கள் தொகை 1991 ஆம் ஆண்டில் 3,66,712 ஆகவும், 2001 ஆம் ஆண்டில் 6,96,760 ஆகவும், 2011 ஆம் ஆண்டில் 8,29,267 ஆகவும் இருந்து, தற்போது 2022 ல் 10 இலட்சத்தை தாண்டியுள்ளது. இம்மாநகராட்சியில் வசிக்கும் பொதுமக்களின் சுகாதார தேவைகளுக்காக 16 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றது.

இம்மாநகராட்சியின் நான்கு வார்டு அலுவலக பகுதிகள் 84 பகுதிகளாக (Sector) பிரிக்கப்பட்டு தொற்றுநோய் கட்டுப்படுத்துதல், தாய்சேய் நலம், மற்றும் தொற்றா நோய் கட்டுப்படுத்துதல் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், தற்போது 32 நல வாழ்வு மையங்களும், 2 மாநகர பொது சுகாதார ஆய்வகங்களும் புதிதாக ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்படி 16 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் பொது சுகாதாரத் துறை ஆகிய இரண்டு துறைகளும் தனித்தனியே அறிவிக்கும் மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தொற்றுநோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்படுத்துதல், கொசுக்களால் பரவும் நோய்களான மலேரியா, யானைக்கால் நோய், டெங்கு உள்ளிட்ட நோய்களை கட்டுப்படுத்துதல், தாய்சேய் நலம் மற்றும் தடுப்பூசி செலுத்துதல், ஜனனி சுரக்ஷா யோஜனா, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம், தமிழக அரசின் முன்னனி திட்டங்களான மக்களைத் தேடி மருத்துவம், வரும்முன் காப்போம், கொரோனா தொற்று தடுப்பு மற்றும் தடுப்பூசி செலுத்தும் பணிகள் மட்டுமல்லாது மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் அறிவிக்கும் திட்டங்கள் உள்ளிட்ட பொது சுகாதாரம் சம்மந்தப்பட்ட அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஏற்கனவே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் அனுமதிக்கப்பட்ட 52 எண்ணிக்கையிலான நகர்ப்புற சுகாதார செவிலியர் பணியிடங்களில் தற்போது 24 நகர்ப்புற சுகாதார செவிலியர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். இதில் 28 பணியிடங்கள் காலியாக உள்ளது. மேலும் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கத்தின் மூலமாக பணியாற்றிட 32 எண்ணிக்கையிலான நகர்ப்புற சுகாதார செவிலியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு, தற்போது 30 நகர்ப்புற சுகாதார செவிலியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 2 பணியிடங்கள் காலியாக உள்ளது. பொதுமக்களின் சுகாதார தேவைகளை கருத்திற்கொண்டு காலியாக உள்ள நகர்ப்புற சுகாதார செவிலியர் பணியிடங்களில் பணியாற்றிட ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் Internship பயிற்சி பெற 24 செவிலியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு காலியாக உள்ள பணியிடங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர். காலி பணியிட விபரம் பின்வருமாறு.

தொடர்ச்சி..

| வ.எண். | பதவியின் தன்மை | பணியிட அனுமதி | பணியில் உள்ளவர்கள் | காலி பணியிடம் |
|---|---|---|---|---|
| 1. | நகர்ப்புற சுகாதார செவிலியர் (நிரந்தரம்) | 52 | 24 | 28 |
| 2. | நகர்ப்புற சுகாதார செவிலியர் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கத்தின் மூலம் பணியமர்த்தப்பட்ட தற்காலிக நகர்ப்புற சுகாதார செவிலியர் | 32 | 30 | 02 |
| | மொத்தம் | 84 | 54 | 30 |

மேற்கண்ட காலி பணியிடங்களில் பயிற்சி பெற்று வரும், ஸ்மார்ட் சிட்டி திட்டம் Internship பயிற்சி செவிலியர்கள் 24 நபர்களுக்கும் வருகின்ற 08.06.2022 உடன் ஒரு வருட பயிற்சி நிறைவடைய உள்ளது. அதனால் ஏற்படும் காலி இடங்களில் பணியாற்ற போதிய செவிலியர்கள் இல்லாமல் பணியாளர் பற்றாக்குறையும், பொது மக்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவைகளில் தாமதமும் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, மேற்கண்ட பணியிடங்களில் பணியாற்றிட, புதியதாக செவிலியர்களை பணியமர்த்தும் பட்சத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் பணிகளில் சுணக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால், பொதுமக்கள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களின் நலன் மற்றும் அத்தியாவசிய சுகாதார தேவை கருதி தற்போது பயிற்சியில் உள்ள 24 செவிலியர்களும் 09.06.2022 முதல் 08.09.2022 வரையுள்ள 3 மாத காலத்திற்கு தற்காலிகமாக பயிற்சியை தொடர்ந்து மேற்கொள்ளவும், அதற்கு ஊக்கத்தொகையாக ஏற்கனவே ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தொகை மாதம் 1–க்கு ரூ.14,000/– என்ற அடிப்படையில் பொது நிதியிலிருந்து வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

அனுமதிக்கலாம்.

(எப்3/7813/2022)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

11) <u>திருமதி மா.சாரதாதேவி, துணைமேயர் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ற்கு ஆத்துக்காடு ஆன்மீகம் நிலையம் செல்லும் வழியில் சாக்கடை வசதி இல்லாத காரணத்தினால் மழைநீர் தேங்கி இருப்பதால் மழைநீர் ஆனது வீட்டிற்குள் புகுந்துவிடுகிறது. இதனால் மக்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர். அதனால் ஆத்துக்காடு ஆன்மீகம் நிலையம் செல்லும் வழியில் தார்சாலை அமைக்கவும் மற்றும் சிறுபாலம் கான்கிரீட் சிலாப் அமைக்கவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

12) <u>3வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.கோ.குமரவேல் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 3வது கோட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட தெருக்கள் உள்ளன. ஆயிரக்கணக்கான குடியிருப்புகள், நூற்றுக்கணக்கான வணிக நிறுவனங்கள், பல பள்ளி நிறுவனங்கள், சிறு தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாகும். மேற்படி இந்த கோட்டத்திற்கு நூற்றுக்கு மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் தேவை. ஆனால் 24 ஆண் தூய்மை பணியாளர்களும், 13 பெண் தூய்மை பணியாளர்களும் மட்டுமே பணியில் உள்ளனர். மேற்படி குறைந்த எண்ணிக்கை கொண்ட பணியாளர்களால் இந்த கோட்டத்தில் உள்ள சுகாதார பணிகளை செய்து முடிக்க முடியவில்லை. ஆட்கள் பற்றாக்குறையால் ஆங்காங்கே குப்பைகள் தேங்குகின்றன. அதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுகின்றது. இதை கருத்தில் கொண்டு மேலும் வார்டு சுகாதார பணிக்கு 15 ஆண் தூய்மை பணியாளர்கள் 5 பெண் தூய்மை பணியாளர்கள் என மொத்தம் 20 தூய்மை பணியாளர்களை புதியதாக 3வது கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

13) <u>3வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.கோ.குமரவேல் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 3வது கோட்டம், ரெட்டியூரில் உள்ள எக்ஸ்.சர்வீஸ் மேன் காலனி பகுதியில் கடந்த 30 ஆண்டுகளாக சாக்கடை வசதி இல்லை. சாலை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட எக்ஸ்.சர்வீஸ் மேன் காலனியில் உள்ள அனைத்து தெருக்களுக்கும் சாக்கடை மற்றும் தார்சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

14) <u>3வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.கோ.குமரவேல் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 3வது கோட்டம் பெருமாள் மலை அடிவாரம் முதல் குரங்குசாவடி பேருந்து நிறுத்தம் வரை உள்ள சாலை இந்த கோட்டத்தில் மிகவும் பிரதான சாலையாகும். இந்த சாலையில் இருபுறமும் ஆயிரக்கணக்கான குடியிருப்புகள், தொழில் நிறுவனங்கள், மிகப்பெரிய பள்ளிக்கூடங்கள் உள்ளன. தினமும் பல்லாயிரகனக்கான மக்கள் நடமாட்டம் உள்ள மிகப்பெரிய சாலையாகும். இந்தசாலையில் இருபுறமும் உள்ள சாக்கடை நீண்ட காலத்திற்கு முன்பு போடப்பட்ட நீர்த்துப்போன சாக்கடையாக உள்ளது. மழைக்காலத்தில் பெருமாள் மலையில் பெய்யும் மழைநீர் அனைத்தும் இந்த சாலையின் வழியாகவே வெளியேறுகிறது. பெரிய சாக்கடைகள் இல்லாததால் இந்த மழைநீரானது சாக்கடை நீரோடு கலந்து குடியிருப்புகள் மற்றும் தொழில் நிறுவனங்களில்

தொடர்ச்சி..

புகுந்து மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகின்றது. சாதாரண மழை பெய்தால் கூட சாலைகளில் முழங்கால் அளவு தண்ணீர் ஓடுகிறது. எனவே பெருமாள் மலை அடிவாரம் முதல் குரங்குசாவடி பேருந்து நிறுத்தம் வரை உள்ள சாலையின் இருபுறமும் மிக அகலமான சாக்கடைகளை ஏற்படுத்தி தார்சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

15) <u>3வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.கோ.குமரவேல் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 3வது கோட்டம் குரங்குசாவடி ஞாயிறு சந்தை முதல் நரசோதிப்பட்டி மாரியம்மன் கோயில் வரை உள்ள சாலையின் இருபுறமும் உள்ள சாக்கடை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. சாலையும் மிகவும் மோசமாகவும், குண்டு குழியுமாகவும் உள்ளது. ரெட்டியூர் இஸ்மாயில்கான் ஏரியில் இருந்து மழைக்காலங்களில் வெளியேறும் உபரிநீர் கே.எஸ்.வி.நகர் வழியாக இந்த சாக்கடையில் வந்து கலக்கின்றன. சிறிய பழுதடைந்த சாக்கடையாக உள்ளதால் ஆங்காங்கே உடைப்பு ஏற்பட்டு குடியிருப்புகள், வணிக வளாகங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் சாலையின் நடுவே மழைநீர் தேங்குகிறது. இந்த சாலையின் வழியாக பள்ளிக்கூடத்திற்கு மாணவர்கள் மற்றும் குரங்குசாவடி சந்தைக்கு காய்கறி வாங்குபவர்கள் என பலரும் அவதிக்கு உள்ளாகிறார்கள் மற்றும் இந்த சாலையில் உள்ள ஆர்த்திநகர், எமரால்டு கார்டன் ஆகிய குறுக்கு தெருக்களில் சாக்கடை வசதி இல்லை. எனவே குரங்குசாவடி ஞாயிறு சந்தை முதல் நரசோதிப்பட்டி மாரியம்மன் கோயில் வரை உள்ள சாலையின் இருபுறமும் அகலமான சாக்கடை வசதியும் தார்சாலையும் மற்றும் ஆர்த்தி நகர் , எமரால்டு கார்டன் ஆகிய குறுக்கு தெருக்களில் சாக்கடை வசதி செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

16) <u>3வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.கோ.குமரவேல் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 3வது கோட்டம் பெருமாள் மலை அடிவாரம் மேச்சேரியான் வட்டப்பகுதியில் உள்ள திருமலை நகர் தெருவில் உள்ள இரண்டு தெருக்களிலும் அறவே சாக்கடை வசதி இல்லை. மழைக்காலங்களில் பெருமாள் மலையில் இருந்து வரும் மழைநீரானது அடிவாரத்தின் மிக அருகில் உள்ள இந்த திருமலை நகர் தெருக்களில் உடனே புகுந்து விடுகின்றது. மேற்படி தெருக்களில் சாக்கடை வசதி இல்லாத காரணத்தினால் குடியிருப்புகளில் வருகின்ற கழிவுநீரை வெளியேற்ற வழிஇல்லை. எனவே, திருமலை நகர் தெருவில் உள்ள இரண்டு தெருக்களிலும் சாக்கடை வசதி அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

17) <u>3வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.கோ.குமரவேல் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 3வது கோட்டம் நகர மலை பகுதியில் அமைந்துள்ள ஊத்துக்கிணறு, மோளக்கரடு, சரவணா கார்டன் ஆகிய பகுதிகள் கோட்டத்தில் மிக உயரமான பகுதியில் அமைந்துள்ள குடியிருப்புகள் ஆகும். மேற்படி குடியிருப்புகளுக்கு குடிநீர் எந்த வகையிலும் கொண்டு செல்ல முடியவில்லை. மாநகராட்சி வாகனங்கள் மூலம் மட்டுமே அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது. அதிக மக்கள் குடியிருக்கின்ற இந்தப் பகுதியில் மேற்படி தண்ணீர் போதுமானதாக இல்லை. அதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகிறார்கள். எனவே, அவர்களின் தேவைகளை நிறைவேற்றுகின்ற வகையில் நிரந்தரமான குடிநீர் திட்டத்தை வகுத்து அந்த பகுதி மக்களுக்கு போதுமான குடிநீர் வழங்கிட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

18) <u>9வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.வெ.தெய்வலிங்கம் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 9வது கோட்டம் பகுதியில் உள்ள வாய்க்கால் பட்டறை டேங்க்கு 6’ வால்வு 2 எண்ணிக்கை தேவைப்படுகிறது. அவசரம் மற்றும் 3’ வால்வு 5 எண்ணிக்கை மற்றும் வள்ளுவர் காலனி டேங்க் பகுதிக்கு 3’ வால்வு 5 எண்ணிக்கை ஆக மொத்தம் 3’ வால்வு 10 எண்ணிக்கை தேவை. உடன் நடவடிக்கை எடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

19) <u>9வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. வெ.தெய்வலிங்கம் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 9வது கோட்டம் பகுதியில் அமைந்துள்ள தண்ணீர் நீர்தேக்க தொட்டி அருகே கீழ்நிலை தொட்டி (ஷம்ப்) அமைத்தால், 10 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் கொடுப்பது மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் கொடுக்க முடியும், எனவே, மேற்படி பகுதியில் கீழ்நிலை தொட்டி அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

20) <u>9வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. வெ.தெய்வலிங்கம் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 9வது கோட்டம் வாய்க்கால் பட்டறை, அரசு உயர்நிலைப்பள்ளிக்கு மதிப்பிற்குரிய வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அண்ணார் திரு.இரா.இராஜேந்திரன் அவர்கள் நிதியின் கீழ் புதிய கட்டிடம் கட்ட இசைந்துள்ளார்கள். எனவே, மேற்கண்ட கட்டிடம் கூடுதல் வகுப்பறை அமைக்க நிலம் ஒதுக்கி காம்பவுண்ட் சுவர் அமைத்திட இம்மாமன்ற தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

21) <u>9வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. வெ.தெய்வலிங்கம் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 9வது கோட்டம் பகுதியில் மண் சாலைகள் நிறைய இருக்கிறது. மேடு பள்ளம் நிறைந்து பொதுமக்கள் மிகவும் அவதிபட்டு வருகிறார்கள். இந்நிலையில் நமது முதல்வர் அவர்களின் அறிவுறுத்தல் படி நமது நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை மாண்புமிகு அமைச்சர்

தொடர்ச்சி..

அவர்களின் அறிவிப்பு எண்.18ன்படி மண்சாலைகள் அனைத்தும் தார்சாலை அமைத்திட திட்ட மதிப்பீடு தயாரிக்க உள்ள நிலையில் UNICODE இல்லா மண் சாலைகளையும் அதில் சேர்த்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

22) 10வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி ரா.சாந்தி அவர்களின் தீர்மானம்

தீர்மானம்.1

10வது கோட்டம் – வார்டு அலுவலகம் வேண்டும்.

தீர்மானம்.2

சாக்கடை கால்வாய் மற்றும் சாலை வசதி தேவை.

1) கோபால் தெரு
2) தாண்டவன் நகர் 1, 2, 3 தெரு
3) சக்தி நகர் (ஏ.வி.எஸ். காலேஜ் பின்புறம்)
4) ராஜகணபதி கோவில் 2, 3 தெரு
5) குமரன் நகர் (செங்கல் அணை – புது காலனி)
6) சமயபுரம் மாரியம்மன் கோவில் (செங்கல் அணை)
7) வடக்கு வன்னியர் 3வது தெரு

தீர்மானம்.3

சாக்கடை கால்வாய் வசதி தேவை.

1) அண்ணாநகர் 1, 2, 3 தெரு
2) வேடிக்கவுண்டர் தெரு
3) சின்னமுத்து தெரு
4) போஸ்ட் ஆபிஸ் தெரு
5) வடக்கு வன்னியர் 1வது தெரு
6) சுண்ணாம்பு சூளை தெரு
7) காளியம்மன் கோவில தெரு (செங்கல் அணை)
8) தாண்டவன் நகர் 5வது தெரு (இரட்டை கிணறு பகுதி)
9) ஸ்ரீராம் நகர்

தீர்மானம்.4

தெருவிளக்கு தேவை.

1) கோபால் தெரு – 2
2) தாண்டவன் நகர் – 2
3) சக்தி நகர் – 5
4) ராஜகணபதி கோவில் தெரு – 4
5) செங்கல் அணை பகுதி – 4
6) அண்ணாநகர் – 4
7) பெருமாள் கோவில் தெரு – 2
8) சின்னமுத்து தெரு – 1
9) வடக்கு வன்னியர் தெரு – 3
10) ஸ்ரீ ராம்நகர் – 1
11) சரஸ்வதி நகர் – 1

தொடர்ச்சி..

தீர்மானம்.5

மாநகராட்சி துவக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளிகளுக்கு கீழ்க்கண்ட வசதிகள் தேவை.

1) குடிநீர் வசதி – துவக்கப்பள்ளி
2) கழிவறை (ஆண்) – துவக்கப்பள்ளி
3) கழிவறை (பெண்) – துவக்கப்பள்ளி
4) குடிநீர் வசதி – உயர்நிலைப்பள்ளி
5) கழிவறை (ஆண்) – உயர்நிலைப்பள்ளி
6) கழிவறை (பெண்) – உயர்நிலைபள்ளி
7) தூய்மை பணியாளர் – 1
8) நுழைவுவாயில் காவலர் – 1
9) விளையாட்டு மைதானம்

தீர்மானம்.6

அங்கன்வாடி – தேவைகள்

1) அண்ணாநகரில் உள்ள இரண்டு அங்கன்வாடி – கழிவறை தேவை
2) மாநகராட்சி பள்ளியில் உள்ள அங்கன்வாடி – கழிவறை தேவை
3) செங்கல் அணை பகுதியில் உள்ள அங்கன்வாடி – கழிவறை தேவை

மேற்கண்ட பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

23) <u>11வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி தே.இந்துஜா அவர்களின் தீர்மானம்</u>

தீர்மானம்

1. வாசகசாலை மெயின் ரோடு, குப்பு செட்டி தெரு வாசகசாலை தெரு சந்திப்பு
2. மல்லிதெரு, வாசகசாலை தெரு 4 சந்திப்பு.
3. மாரியம்மன் கோவில் தெரு வாசக சாலை தெரு 3 சந்திப்பு
4. பெண்டம் ராமசாமி தெரு வாசகசாலை தெரு 1வது சந்திப்பு சாக்கடை மோரி அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

24) <u>11வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி தே.இந்துஜா அவர்களின் தீர்மானம்</u>

பொன்னம்மாபேட்டை 11வது கோட்டத்திற்கு Camp Pack வாகனம் பல மாதங்களாக பழுதடைந்துள்ளது. ஆகவே அதை சீர் செய்திடல். 10 புதிய BIN தேவைப்படுகிறது. 11வது கோட்டத்திற்கு மேற்படி பணிகளை நிறைவேற்றிட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

25) <u>11வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி தே.இந்துஜா அவர்களின் தீர்மானம்</u>

பொன்னம்மாபேட்டை 11வது கோட்டத்திற்கு புதியதாக ஒரு (LCV) வாகனம் வந்துள்ளது. அதில் எந்த பயன் உள்ளதாகவும் தெரியவில்லை. டீசல் வாகனமும் இருந்திருந்தால் மிகவும் பயனாக இருந்திருக்கும். பெட்ரோல் வாகனமாக இருப்பதால் அதில் ஹைட்ராலிக் பவர் மிகவும் குறைவாக உள்ளதால் பின்புறம் தூக்கி குப்பைகளை கொட்ட இயலவில்லை. இதற்கு மாற்று வாகனமோ அல்லது இதை சீர் செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

26) <u>11வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி தே.இந்துஜா அவர்களின் தீர்மானம்</u>

பொன்னம்மாபேட்டை 11வது கோட்டத்தில் உள்ள குப்பைத்தொட்டிகள் மிகவும் பழைய தொட்டிகளாகவும் சக்கரம் பழுதடைந்ததாக இருப்பதால் எங்களுக்கு புதிதாக 20 குப்பை தொட்டிகள் அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

27) <u>11வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி தே.இந்துஜா அவர்களின் தீர்மானம்</u>

பொன்னம்மாபேட்டை 11வது கோட்டத்திற்கு புதிதாக சாக்கடை வசதிகள் தேவைப்படுகின்றது மற்றும் மோரிகள் சீரமைக்க வேண்டும். ஆங்காங்கே தண்ணீர் தேங்கி நிற்பதால் சாக்கடை சீராக செல்ல வில்லை. அதனால் புதிதாக சாக்கடையை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

28) <u>11வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி தே.இந்துஜா அவர்களின் தீர்மானம்</u>

11வது கோட்டத்தில் உள்ள என்.ஜி.ஜி.ஓ. காலனியில் மற்றும் கோபால் செட்டி வீதியில் பன்றிகள் தொல்லை அதிகமாக உள்ளது. அதை கட்டுப்படுத்த வேண்டும். சாக்கடைகள் தூர் வாரினால் கூட பன்றிகள் அதை அசுத்தம் செய்கிறது. இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

29) <u>11வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி தே.இந்துஜா அவர்களின் தீர்மானம்</u>

தீர்மானம் – மோட்டார் பழுது செய்ய வேண்டியவை.

1. பெரிய மாரியம்மன் கோவில் தெரு, என்.ஜி.ஜி.ஓ காலனி ரோடு மற்றும் சாக்கடை அமைக்கும் போது ஸ்டார்ட்டர் பாக்ஸ் பழுதடைந்துவிட்டது. அதை சரிசெய்து தர வேண்டும். அங்கே கூடுதலாக தண்ணீர் டேங்க் அமைத்து தர வேண்டும்.
2. வாசக சாலை தெரு 1ல் மோட்டார் திருட்டு போய்விட்டது. மோட்டார் அமைத்துத்தர வேண்டும்.
3. வாசகசாலை தெருவில் இரண்டில் மோட்டார் பழுது அடைந்து விட்டது. அதை சரிசெய்ய வேண்டும்.
4. வாசகசாலை தெருவில் 4ல் கீழ் மோட்டார் இரண்டு ஆண்டுகளாக மோட்டார் பழுதடைந்துள்ளது. அதை சரிசெய்ய வேண்டும்.
5. 9/1 ஏ.வி.எம். மண்டபம் எதிரில் விநாயகர் கோவில் அருகில் மோட்டார் சரி செய்ய வேண்டும்.
6. 11/11 வாசக சாலை 2 (சிங்காரப்பேட்டை) மோட்டார் சரி செய்ய வேண்டும்.

மேற்படி பழுதுகளை சரிசெய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

30) <u>11வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி தே.இந்துஜா அவர்களின் தீர்மானம்</u>

பொன்னம்மாபேட்டை 11வது கோட்டத்தில் உள்ள

1. கோபால் செட்டி தெருவில் உள்ள கீழ் மோட்டார் சரி செய்ய வேண்டும். 11/25.
2. ஏ.வி.எம். மண்டபம் எதிரில் உள்ள மோட்டார் சரிசெய்ய வேண்டும். 9/1.
3. பெரிய மாரியம்மன் கோவில் தெரு அங்கு மோட்டார் ரூம் இல்லை. டேங்க் வைக்க வேண்டும் மற்றும் அதே தெருவில் வேறு ஒரு இடத்திலும் டேங்க் மட்டும் வைத்து தருமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர்.
4. தில்லைநகர் மெயின் ரோட்டில் ஏற்கனவே உள்ள மோட்டார் சைக்கிள் புதிய லைன் அமைத்து மற்றொரு மோட்டார் தேவைப்படுகிறது.
5. வடக்கு ரயில்வே காலனி இரண்டில் புதிய டேங்க் லைன் அமைத்து தருமாறும் மற்றும் அதே தெருவில் புதிய லைன்அமைத்தல்.

இவைகளை சீர் செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

31) <u>11வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி தே.இந்துஜா அவர்களின் தீர்மானம்</u>

தீர்மானம் – அங்கன்வாடி பள்ளிக்கு கழிப்பறை மற்றும் தண்ணீர் வசதி வேண்டுதல்.

பொன்னம்மாபேட்டை 11வது கோட்டத்தில் உள்ள அரசினர் அங்கன்வாடி பள்ளியில் கழிப்பறை வசதி இல்லை. மேலும் பள்ளிக்கு தேவையான தண்ணீர் டேங்க் IIHD அருகில் அமைந்துள்ளது. அந்த டேங்கில் இருந்து பைப் லைன் அமைத்து பள்ளிக்கு தண்ணீர் வரும்படி ஏற்பாடு செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

32) <u>14வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.ரா.சாந்தமூர்த்தி அவர்களின் தீர்மானம்</u>

14வது கோட்டத்தில் கீழ்க்கண்ட தெருக்கள், சாக்கடைகள் மிகவும் சேதமடைந்து மக்கள் மிகவும் கஷ்டத்தில் உள்ளார்கள். கீழ்க்கண்ட பணிகளை அவசரகால அடிப்படை வசதிகளை உடனேசெய்தல்.

1. மக்கான் தெருவில் சாக்கடை அமைத்தும், சாலை வசதி செய்தல்.
2. பழனியப்பா நகரில் சாக்கடை மற்றும் தார்சாலை செய்தல்.
3. அங்காளம்மன் கோவில் தெரு, மேற்கு தெரு ஆகிய இடங்களில் சாக்கடை மற்றும் தார்சாலை அமைத்தல்.
4. அஸ்தம்பட்டி இட்டேரிரோடில் சாக்கடை மற்றும் தார்சாலை அமைத்தல்.
5. அஸ்தம்பட்டி கோவிந்தன் எக்ஸ்டென்சனில் சாக்கடை அமைத்தும் தார்சாலை அமைத்தல்.
6. ராஜமாணிக்கம் தெருவில் சாக்கடை மற்றும் தார்சாலை வசதி செய்தல்.

மேற்படி பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

33) <u>17வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி தி.ராஜேஸ்வரி அவர்களின் தீர்மானம்</u>

நகரமலை அடிவாரம் பகுதியிலிருந்து வரும் அதிக அளவிலான மழைநீர் மற்றும் கழிவுநீரானது நகரமலை மெயின்ரோடு, காட்டூர், நடுவட்டம், நியூபேர்லேண்ட்ஸ் வழியாகவும், சாரதா வித்யாலயா பள்ளியிலிருந்து வரும் கழிவுநீர் மற்றும் மழைநீர் அழகாபுரம் காவல்நிலையம் அருகில் சாரதா கல்லூரி சாலையை கடந்து அத்வைத ஆஸ்ரமம் சாலை வழியாக செல்கிறது. மழைகாலங்களில் அந்த பகுதியில் அமைந்துள்ள கிரீன்வேஸ் சாலை, மணிமேகலை தெரு, லட்சுமி தெரு, கண்ணகி தெரு, திருநாவுக்கரசர் தெரு போன்ற பகுதியில் மக்கள் வீட்டைவிட்டு வெளியேற முடியாத அளவிற்கு தண்ணீர் தேங்கி நின்று விடுகிறது. இதற்கு தீர்வு காணும் விதமாக மாண்புமிகு மேயர் அவர்கள், உயர்திரு ஆணையாளர் அவர்கள், உயர்திரு மண்டலக்குழு தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுத்து பிரச்சனைக்கு தீர்வு காண அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையில் கான்வென்ட்ரோடு பகுதியில் புதியதாய் சாக்கடை கால்வாய் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அந்த கால்வாய் மூலம் அதிக அளவு மழைநீர் மற்றும் சாக்கடை தண்ணீர் சாரதா வித்யாலயா பள்ளி வழியாக வெளியேறி, ஏற்கனவே மிக பெரிய பிரச்சனையாக உள்ள அத்வைத ஆசிரமம் ரோட்டில் கலந்து மேலும் சிரமத்தை ஏற்படுத்துகிறது.

எனவே, கான்வென்ட் ரோடு பகுதியில் இருந்து வெளியேறும் மழைநீர் மற்றும் கால்வாய் தண்ணீரை 17வது கோட்ட பொதுமக்களை பாதிக்காத வகையில் வேறு திசையில் திருப்பிவிட நடவடிக்கை எடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

34) <u>19வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.தேன்மொழி அவர்களின் தீர்மானம்</u>

19வது கோட்டத்தில் ஜாகீர் சின்ன அம்மாபாளையத்தில் உள்ள வீரபாண்டியார்நகரில் 12 வீதிகள் உள்ளன. அங்கு 300 குடும்பம் வசித்து வருகிறார்கள். இன்று வரை தெருவிளக்கு எதுவும் இல்லை. இந்த 12 வீதிகளுக்கும் மின்விளக்கு அமைத்து தருமாறும், 12 வீதிகளுக்கு சாக்கடை வசதி, ரோடு, மோரி அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

35) <u>19வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.தேன்மொழி அவர்களின் தீர்மானம்</u>

19வது கோட்டத்தில் துப்புரவு பணியாளர்கள் குறைந்த எண்ணிக்கையில் உள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்பு வாக்காளர்கள் எண்ணிக்கை 6000 ஆக இருந்தது. தற்போது வாக்காளர்கள் எண்ணிக்கை 11500 ஆக உயர்ந்து உள்ளது. இந்த வார்டில் துப்புரவு பணியாளர்கள் 34 நபர்கள் பணியில் உள்ளனர். இதில் பெண் ஊழியர்கள் அதிகம் உள்ளனர். இங்கு ஆட்கள் பற்றாக்குறை உள்ளதால் மேலும் 26 பணியாளர்கள் தேவைபடுகிறார்கள். ஆண் ஊழியர்களை அதிகம் நியமித்திடவும், வீட்டிற்கு சென்று குப்பை சேகரிக்கும் வண்டி 3 மட்டும் உள்ளது. குப்பை கொட்டும் டிரம் குறைவாக உள்ளதால் வீதிகளில் குப்பையை வீசி செல்கின்றனர். இவற்றை அதிகப்படுத்திடவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

36) 19வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.தேன்மொழி அவர்களின் தீர்மானம்

19வது கோட்டத்தில் உள்ள மயானத்திற்கு போகும் பாதை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மயானத்தை சுற்றி காம்பௌண்ட் சுவர், புதிதாக மின்கம்பம் வசதி அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

37) 21வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.வெ.ஜனார்த்தனன் அவர்களின் தீர்மானம்

1. கூடுதல் துப்புரவு பணியாளர்கள் 40 பேர் வேண்டும்.

2. இந்திராநகர், அண்ணாநகர் பகுதியில் பழுதடைந்துள்ள சுகாதார வளாகம் சரிசெய்தல்.

3. நுரைய கவுண்டர் வட்டம் முதல் ஊர் கவுண்டர் வரை உள்ள மண்சாலையை சரிசெய்து கான்கிரீட் சாலை அமைத்தல்.

4.அரியகவுண்டம்பட்டி ஐ.டி. பகுதியில் உள்ள மண்சாலையை தார்சாலையாக மாற்றுதல்.

5. ராமலிங்கம் நகர் பகுதியில் கழிவுநீர் கால்வாய் ஏற்படுத்திடல்.

மேற்படி பணிகளை நிறைவேற்றிட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

38) 22வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.கே.சி.செல்வராஜ் அவர்களின் தீர்மானம்

சூரமங்கலம் மண்டலம் கோட்டம்–22ல் சிவதாபுரம் மெயின் ரோட்டில் இருந்து மெய்யன் தெரு வழியாக பெருமாள் கோவில் கரடு செல்லும் வழியில் சாலையின் மிக அருகில் சரிந்த நிலையில் உள்ள தங்கமணி வீடு அருகில் கிணறு ஒன்றும் அதே சாலையில் சுந்தரம் வீடு அருகில் கிணறும் ஒன்றும் தார்சாலையை அரித்து உள் வாங்கி உள்ளது. எந்த நேரத்திலும் விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, இரண்டு கிணறுகளுக்கும் தடுப்புச்சுவர் அமைத்து கம்பி வலை ஏற்படுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

39) 22வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.கே.சி.செல்வராஜ் அவர்களின் தீர்மானம்

சூரமங்கலம் மண்டலம் கோட்டம்–22ல் வெள்ளைய கவுண்டர் தெரு (பழைய சூரமங்கலம் லட்சுமி தியேட்டர் பின்புறம்) இருந்து போடிநாயக்கன்பட்டி ஏரிக்கரை வரை தார்சாலை மிக குறுகியதாக, பழுதடைந்த நிலையில் உள்ளது. இங்கு மாநகராட்சி நில அளவீடு செய்து தார்சாலை அகலப்படுத்தியும், புதிய தார்சாலை அமைத்தும், இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை தீர்க்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

40) திரு.எஸ்.டி.கலையமுதன் , சூரமங்கலம் வார்டு குழுத் தலைவர் (26வது கோட்டம்) அவர்களின் தீர்மானம்

சேலம் மாநகராட்சி 26 கோட்டத்தில் சாமிநாதபுரம் பெரிய கிணறு தெருவில் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் உள்ளது. பிறப்பு – இறப்பு சான்றிதழ் பதிவு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கும் பணியும் இவ்வலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. இந்த அலுவலகம் மிகவும் பழைமையான கட்டிடம் ஆகும். பழுது பார்த்து சீரமைக்கவும், சுவர்களில் வண்ணம் அடிக்கப்பட்டு தரையில் டைல்ஸ் கற்கள் பதிக்கவும், இவ்வலுவலகம் முன்பு சாக்கடை பழுது ஏற்பட்டு பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தி வருவதால் சாக்கடை புதுப்பிக்கவும் பொதுமக்கள் எளிதில் வரக்கூடிய படிக்கட்டுக்கள் அமைக்கவும், மின் ஒயர்கள் மாற்றி மின்விளக்குகள் மாற்றி அமைக்கவும் மதிப்பீடு தயாரித்து அவசர அவசியம் கருதி பணியை நிறைவேற்றிட மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

41) திரு.எஸ்.டி.கலையமுதன் , சூரமங்கலம் வார்டு குழுத் தலைவர் (26வது கோட்டம்) அவர்களின் தீர்மானம்

சேலம் மாநகராட்சி 26வது கோட்டத்தில் சாமிநாதபுரம் பெரிய கிணறு தெருவில் உள்ள சுகாதார ஆய்வாளர் அலுவலகத்திற்கு பின்னால் சேர்ந்தார்போல் பெரிய கிணறு உள்ளது. 20 ஆண்டுகளுக்கு முன்பு கிணற்றை தூர் எடுத்து 3 எச்.பி. மோட்டார் வைத்து நீரை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு சின்டெக்ஸ் தொட்டி மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டது. தற்போது மோட்டாரும் இல்லை, சின்டெக்ஸ் தொட்டியும் இல்லை. கிணற்றில் குப்பைகள் சேர்ந்து மரங்கள் முளைத்து செடி கொடிகள் சூழ்ந்து துர்நாற்றம் வீசுகிறது. இக்கிணற்றை தூர் எடுத்து தண்ணீரை சுத்தப்படுத்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

42) திரு.எஸ்.டி.கலையமுதன் , சூரமங்கலம் வார்டு குழுத் தலைவர் (26வது கோட்டம்) அவர்களின் தீர்மானம்

சேலம் மாநகராட்சி 26வது கோட்டத்தில் 42 ஆழ்துளை கிணறு குழாய்கள் மின்மோட்டாருடன் இயங்கி வந்தது. இதில் 17 இடங்களில் மின்மோட்டார்கள் இல்லை. சில இடங்களில் பழுதடைந்துள்ளது. எனவே, புதிய மின்மோட்டார்கள் ஏர்கம்ப்ரஸருடன் அமைத்திடவும், சாமிநாதபுரம் வண்டிப்பேட்டை தெருவில் வேறு இடத்தில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்திடவும், கோடைகாலம் என்பதால் தண்ணீர் தேவை மிக முக்கியமாக கருதுவதால் 26வது கோட்டத்தில் ஆழ்துளை கிணறு குழாய்களை பார்வையிட்டு சீரமைத்திட அவசர அவசியம் கருதி பணியை விரைந்து நடவடிக்கை எடுத்திட மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

43) திரு.எஸ்.டி.கலையமுதன் , சூரமங்கலம் வார்டு குழுத் தலைவர் (26வது கோட்டம்) அவர்களின் தீர்மானம்

சேலம் மாநகராட்சி 26வது கோட்டத்தில் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் மொத்தம் 105 தெருக்கள் உள்ளது. சந்துப்பாதைகளும் உள்ளன. சாக்கடைகள் பழுதடைந்து உள்ளதால் சேரும் சகதியும் துர்நாற்றம் வீசுவதோடு பொதுமக்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது. பொதுமக்களும் தொடர்ந்து புகார்கள் தெரிவித்த வண்ணம் உள்ளனர். குப்பைகள் ஆங்காங்கே தேங்கி கிடக்கின்றன. 30 சதவீத பணிக்கூட சரிவர நடைபெறுவதில்லை. போதிய துப்புரவு பணியாளர்கள் வாகனங்கள் இல்லை. எனவே மக்கள் நலனை கருத்தில் கொண்டு பின்கண்டவாறு உள்ள தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

தேவைப்படும் துப்புரவு ஆண் பணியாளர்கள் – 40 பேர்
தேவைப்படும் துப்புரவு பெண் பணியாளர்கள் – 40 பேர்
தேவைப்படும் எல்.சி.வி. வாகனம் – 5
தேவைப்படும் டிப்பர் வாகனம் – 2
தேவைப்படும் தள்ளுவண்டிகள் – 50

மற்றும் உபகரணங்கள் தேவைப்படுவதால் அவசர அவசியம் கருதி சுகாதாரப்பணி தேவையை நிறைவேற்றிட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

44) திரு.எஸ்.டி.கலையமுதன் , சூரமங்கலம் வார்டு குழுத் தலைவர் (26வது கோட்டம்) அவர்களின் தீர்மானம்

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலம் 19வது கோட்டம் உழவர் சந்தைக்கு முன்பு உள்ள மாநகராட்சி வணிக வளாக கடைகளின் கட்டிடங்கள் மிகவும் பழைமையான கட்டிடம். கட்டிடம் இடிந்து விழும் சூழ்நிலை உள்ளதால் கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக வணிக வளாக கட்டிடங்கள் கட்டி ஏற்கனவே அந்தந்த கடைகளில் வாடகைக்கு இருப்போர்க்கே உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்படி சம்மந்தப்பட்டவர்க்கு வாடகைக்குவிடலாம் எனவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

45) திரு.எஸ்.டி.கலையமுதன் , சூரமங்கலம் வார்டு குழுத் தலைவர் (26வது கோட்டம்) அவர்களின் தீர்மானம்

சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண்.22ல் வெள்ளையக்கவுண்டர் தெரு (பழைய சூரமங்கலம் லட்சுமி தியேட்டர் பின்புறம்) இருந்து போடிநாயக்கன்பட்டி ஏரிக்கரை தார்சாலை மிக குறுகியதாக, பழுதடைந்த நிலையில் உள்ளது. இங்கு மாநகராட்சி நில அளவீடு செய்து தார்சாலை அகலப்படுத்தியும், புதிய தார்சாலை அமைத்தும், இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை தீர்த்திடும் வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

46) 30வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திருமதி. ர.அம்சா அவர்களின் தீர்மானம்

30வது கோட்டத்தில் தாண்டவராயன் தெருவில் உள்ள பழுது ஏற்பட்டுள்ள அங்கன்வாடி கட்டிடத்திற்கு புதிய கட்டிடம் அமைக்கவும் மற்றும் சுந்தரம் தெருவில் உள்ள நகரவை துவக்கப்பள்ளியில் சத்துணவுக்கூடம், கட்டிடம், அரசாங்க நிலத்தில் மாணவர்கள் விளையாட மைதானம் அமைக்கவும், விளையாட்டு பொருட்கள் அமைத்துக்கொடுக்கவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

47) 31வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு.எஸ்.ஏ.சையத்மூசா அவர்களின் தீர்மானம்

31வது கோட்டத்திற்கு மேட்டு மாரியம்மன் கோவில் தெரு மற்றும் சிவகாமி தெருவில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னதாக அமைக்கப்பட்ட பழுது அடைந்த சாக்கடைகள் உள்ளன. மேற்படி பகுதியில் இருக்கும் சாக்கடைகள் மேலாக அமைந்துள்ளதால் சிறு மழை வந்தாலும் சாக்கடை சாலைக்கு நடுவே வந்து விடுகின்றது. இதனால் பகுதி வாழ் மக்கள் பெரும் சிரமங்களுக்குள் உள்ளாகின்றனர். மேலும் மேட்டு மாரியம்மன் கோவிலுக்கு செல்லும் சாலை முழுவதும் சாக்கடை தேங்கி விடுவதால் கோவிலுக்கு செல்லும் பக்தர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே கோவிலுக்கு போக வேண்டிய அவல நிலையில் உள்ளது.

எனவே, மேட்டு மாரியம்மன் கோவில் தெரு மற்றும் சிவகாமி தெருவில் அமைந்துள்ள சாக்கடைகளை ஆளப்படுத்தியும், புதிய கான்கிரீட் சாக்கடைகள் அமைத்துத்தரவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

48) 34வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. து.இளங்கோ அவர்களின் தீர்மானம்

சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டலம் சீலாவரி ஏரியில் இருந்து வரும் உபரி நீர் மற்றும் அம்மாபேட்டை 35வது கோட்டத்திற்குட்பட்ட சில பகுதிகளில் இருந்து வரும் மழைநீர் சாக்கடை நீர், மழை காலங்களில் 34வது கோட்டத்தில் தாழ்வு பகுதியாக உள்ள ஏழை எளிய மக்கள் வசிக்கும் பெரும்பான்மை வீடுகளுக்குள் புகுந்து வடிந்து செல்ல வாய்ப்பின்றி பெரும் சிரமங்களையும் சுகாதார சீர்கேடுகளையும் ஏற்படுத்தி வருகின்றது. இதற்கு நிரந்தர தீர்வு ஏற்பட ஏற்கனவே நெடுஞ்சாலைத்துறைக்கு உரிய மிலிடெரி ரோட்டில் ஏ.வி.எஸ். கல்லூரி பிரிவு அருகில் இருந்து, குருவாயூரப்பன் கோயில் வரை உள்ள அகலமான சாக்கடை மற்றும் மழைநீர் வடிகால் கால்வாயை சீர்செய்தும், தொடர்ந்து சுமார் 1.2 கி.மீ நீளத்திற்கு பொன்னம்மாபேட்டை ரயில்வே கேட், டி.எம்.எஸ். செட் வழியாக லவ்வோ காலனி வழியாக ஆற்றோரம் தெருவின் அருகில் செல்லும் திருமணிமுத்தாற்றில் இணைக்கும் வகையில் புதிய சாக்கடை மற்றும் மழைநீர் வடிகால் கால்வாய் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

49) 34வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. து.இளங்கோ அவர்களின் தீர்மானம்

சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டலம் 34வது கோட்டம் பாரதியார் தெரு 1, 2, 3, 4 குமரன் காலனி பாலாஜி நகர் மெயின் ரோடு மற்றும் பாலாஜி நகர் குறுக்க தெருக்களில் இருந்து வரும் மழைநீர் மற்றும் சாக்கடை நீர், அப்பகுதி வீடுகளுக்குள் புகாத வகையில் தடையின்றி செல்ல ஏதுவாக பாலாஜி நகர் மெயின் ரோடு முதல் அம்மாப்பேட்டை மெயின் ரோடு வெள்ளைக்குட்டை கால்வாய் இணைப்பு வரை உள்ள 1972ம் ஆண்டு அமைக்கப்பட்ட 16 அடி அகலமுள்ள ராஜா வாய்க்கால் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர் எடுத்து அதில் புதிய கான்கிரீட் கால்வாய் அமைத்துத்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

50) 34வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. து.இளங்கோ அவர்களின் தீர்மானம்

சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டலம் 34வது கோட்டத்திற்குட்பட்ட எளிய மக்கள் வசித்து வரும் கார்பெட் 1, 2 தெருக்கள் மற்றும் அங்குள்ள சாக்கடை கால்வாய்கள் மிகவும் சேதமுற்று இருப்பதால் அப்பகுதி மக்கள் மழை காலங்களில் சொல்லவொன்னா துயருக்கு ஆளாகி வருகின்றனர். எனவே அவசர அவசியமாக அங்கு வசிக்கும் மக்கள் நலன் கருதி சாக்கடை கால்வாய் மற்றும் புதிய சாலைகளை உடனடியாக அமைத்துத்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

51) 34வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. து.இளங்கோ அவர்களின் தீர்மானம்

34வது கோட்டத்தின் பெரும்பான்மை பகுதிகளில் இருந்து வெளியேறும் சாக்கடை நீர் மற்றும் மழைநீர் அனைத்தும், பாலாஜி நகர் மெயின் ரோடு மற்றும் நெ.2 புதுத்தெரு மெயின் ரோடு வழியாக சென்று அம்மாபேட்டை மெயின் ரோடில் இடதுபுறமாக உள்ள சாக்கடை கால்வாய் வழியாக தடையின்றி செல்ல வேண்டும்.

தொடர்ச்சி..

ஆனால், அவ்வழியில் சிறு சிறு ஆக்கிரமிப்புகள் மற்றும் அடைப்புகள் நிறைய உள்ளதால் அவ்வழியே சாக்கடை நீர் முழுமையாக வெளியேற முடியாமல் மழைநேரங்களில் 34வதுகோட்டத்தில் உள்ள தாழ்வான பகுதிகளில் உள்ள பெரும்பான்மை வீடுகள் மற்றும் தெருக்களில் புகுந்து வடிந்து செல்ல வழியின்றி நெடுநாட்கள் தேங்கி அப்பகுதி மக்களுக்கு பெரும் சிரமத்தையும் சுகாதார சீர்கேடுகளையும், வாழ்வாதார பாதிப்பையும் அடிக்கடி ஏற்படுத்திவிடுகின்றது.

எனவே, அங்கு உள்ள அடைப்புகளையும் சிறு சிறு ஆக்கிரமிப்புகளையும் அகற்றி மழைநீர் மற்றும் சாக்கடை நீர் தடையின்றி செல்ல இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

52) <u>34வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. து.இளங்கோ அவர்களின் தீர்மானம்</u>

34வது கோட்டத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் நவம்பர் 2019ல் துவங்கி தற்போது வரை அமைக்கப்பட்டு வரும் எண்.2 புதுத்தெரு மெயின் ரோடு, சாக்கடை கால்வாய் மற்றும் கான்கிரீட் சாலை அமைக்கும் பணியினை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் முழுமையாக கீழ்கண்ட விவரங்களின்படி முடிக்காமல் இருப்பது அப்பகுதி மக்கள் தினமும் பெரும் சிரமங்களை சந்திக்கும் வேதனை நிலையை ஏற்படுத்தி உள்ளது. எனவே உடனடியாக கீழ்கண்ட நிலுவை மற்றும் நிவர்த்தி செய்ய வேண்டிய பணிகளை தாங்கள் ஆய்வு செய்து சரியாக முறையாக முடித்து தர உத்தரவிட்டு, முழுமையாக பணிகள் நிறைவு பெற்ற சாலையாக அமைத்தல்.

நிலுவையில் உள்ள நிவர்த்தி செய்ய வேண்டிய சில முக்கிய பணிகள்.

1. நெ.3 புதுத்தெரு அன்னை அஞ்சுகம் நகர் தெருவை இணைக்கும் சிறுபாலத்தின் இணைப்பு சாய்வு சாலை (ரேம்ப்) இதுவரை போடப்படவில்லை.
2. நெ.1 புதுத்தெரு இணைப்பில் உள்ள சாய்வு சாலை (ரேம்ப்) பாதி மட்டும் போட்டு மீதி அப்படியே விட்டுவிட்டனர். அதை சரியாக முழுமையாக முடிக்க வேண்டும்.
3. கார்பெட் தெரு இரண்டில் சற்றும் திட்டமிடாமல் பயன்பாட்டிற்கு சரிவராத முறையில் முட்டை வடிவில் அமைக்கப்பட்டுள்ள தவறான முறையில் போடப்பட்டுள்ள சாய்வு இணைப்பு சாலையை (ரேம்ப்) எடுத்துவிட்டு சரியாக போடுதல்.
4. திப்புநகர் மற்றும் ரயில்வே லைன் தெற்கு தெருவிற்கு உள்ள இணைப்பு சிறு சந்துகளில் மக்கள் சென்று வர ஏதுவாக ஏற்கனவே இருந்ததை போல ஸ்லாப் மூடிகள் போட்டுத்தர வேண்டும்.
5. தெருவிளக்கு அமைப்பதற்காக போடப்பட்டுள்ள கான்கிரீட் பீடங்கள் மீது கம்பங்கள் பொருத்தி தெருவிளக்கு அமைக்க வேண்டும்.
   மேலும் முழுமையாக சாலை அமைக்கும் பணியின் போது தவறுதலாகவோ அல்லது கவனக்குறைவாகவோ சாக்கடை கால்வாயில் கொட்டப்பட்டுள்ள கான்கிரீட் கலவைகள், அறுக்கப்படாத கம்பிகள், ஜல்லி மற்றும் குப்பைகள் அனைத்தையும் எடுத்து சுத்தம் செய்து விட்டு சாக்கடையில் நீர் தடையின்றி ஓட வழிவகை செய்ய வேண்டும்.

இச்சாலையில் உள்ள இணைப்பு தெருக்களுக்கு முன்பு ஏற்பட்டு வரும் விபத்துக்களை தவிர்க்கும் விதமாக முக்கிய தெரு இணைப்புகளுக்கு கிடையிடையே வேகத்தடைகளை அமைத்துத்தரவும், மேற்படி பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

53) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. மா. திருஞானம் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 37வது கோட்டம் பகுதியில் ஒட்டியுள்ள சுந்தரகணபதி திருக்கோயில் கடந்த இருபது ஆண்டுகளாக கோயில் திருப்பணி சிறப்பாக நடைபெற்று பக்தர்கள் அதிகம் வருகைபுரிந்து தரிசனம் செய்து வருகின்றனர். கோயில் தரிசனம் செய்ய மழைகாலங்களிலும், கோடை காலங்களில் பக்தர்கள் சாலையில் நின்று தரிசனம் செய்வதால் பக்தர்கள் அவதிபடுவதை கருத்தில் கொண்டு உயரமான சுமார் 10 அடிக்கு குறையாமல் நிழற்குடை அமைந்துள்ளது. இதனால் பக்தர்களுக்கு எந்த ஒரு இடையூறு இல்லாமல் உள்ளனர். எனவே, பக்தர்களின் கோரிக்கையை ஏற்று கோயில் முன்புறம் உள்ள நிழற்குடை நிரந்தரமாகவும், பாதுகாப்பாகவும் இருப்பதால் நிழற்குடை நிரந்தரமாக இருக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

54) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. மா. திருஞானம் அவர்களின் தீர்மானம்</u>

கீழ்க்கண்ட இடங்களுக்கு குடிநீர் பைப் லைன் அமைத்தல்.

1. குமரகிரி பைபாஸ் குமரகிரி சாலை செல்லுதல்
2. குட்டிக்கரடு டேங்க் முதல் பாலம் வரை இரும்பு பைப்பு அமைத்தல்.
3. இராமநாதபுரம் முதல் குட்டிக்கரடு வரை போர்வெல் பைப்பு அமைத்தல்.
4. குமரகிரி ஊருக்குள் 4'' பைப்பு அமைத்து வீடுகளுக்கு டெபாசிட் பணம் செலுத்திபின் சப்ளை கொடுத்தல்.
5. குண்டுக்கல் காடு பகுதியில் 3'' பி.வி.சி. பைப்பு லைன் அமைத்தல்.
6. செல்வநகர் டேங்க் முதல் பைபாஸ் சாலை வரை 3'' பைப்பு லைன் அமைத்தல்.
7. சம்மந்தம் ஸ்பின்னிங் பின்புறம் உள்ள பகுதியில் எம்.ஜி.ஆர்.நகர் பகுதி முதல் பைபாஸ் வரை 3'' பைப்பு பி.வி.சி. அமைத்தல்

   மேற்கண்ட இடங்களில் புதியதாக பைப் லைன் அமைத்தால் மாநகராட்சிக்கு வரி வருவாய் அதிகம் கிடைக்கும். டெபாசிட் தொகையும் அதிகம் கிடைக்கும் என்பதால் மாநகராட்சியின் வருவாய் பற்றாக்குறை கருத்தில் கொண்டும் மேற்கண்ட இடங்களில பைப்லைன் இல்லாத காரணத்தால் குடிநீர் கிடைக்க பொதுமக்கள் பல ஆண்டுகளாக அவதிபடுவதை கருத்தில் கொண்டு மேற்கண்ட இடங்களில் பைப் லைன் அமைக்கவும் அடிப்படை வசதி என்பதால் உடனடியாக பைப் லைன் அமைத்து வருவாய் அதிகரிப்பு கருத்தில் கொண்டு பணிகள் விரைந்து முடிக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

55) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. மா. திருஞானம் அவர்களின் தீர்மானம்</u>

கீழ்க்கண்ட இடங்களில் வடிகால் மற்றும் சாலை அமைத்தல்.

1. பவர்ஹவுஸ் பின்புறம் – இரண்டு சாலைகள் வடிகால் மற்றும் சாலை
2. சாஸ்திரி நகர் பைபாஸ் – இரண்டு சாலைகள் மற்றும் வடிகால் அமைத்தல்.
3. இராமநாதபுரம் ம.பொ.சி.தெரு – இரண்டு சாலைகள் மற்றும் வடிகால்.
4. ரஷ்யா பகுதி – இரண்டு சாலைகள் மற்றும் வடிகால்.
5. சங்கிலி ஆசாரி பகுதி – மூன்று சாலைகள் மற்றும் வடிகால்.
6. குட்டிகரடு புதுப்பேட்டை – மூன்று சாலைகள் மற்றும் வடிகால்.
7. நாமமலை கலைஞர் காலனி – வடிகால் மட்டும் அமைத்தல்.
8. மாரியப்பன் நகர் – மூன்று சாலை மற்றும் வடிகால் மற்றும் குறுக்கு சாலைகள்.
9. காமராஜ்நகர் காலனி – வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல்.
10. நாகர்படையாச்சிக்காடு – மூன்று தெருக்கள் சாலை மற்றும் வடிகால் அமைத்தல்.
11. செல்வநகர் – கான்கிரீட் தளம் மற்றும் வடிகால் அமைத்தல்.
12. தங்கம் பைப் சாலை – சாலை மற்றும் வடிகால் அமைத்தல்.

    மேற்கண்ட பகுதிகளில் பொதுமக்கள் செல்லும்போது குண்டும் குழியுமாக இருப்பதாலும் மழைகாலங்களில் நடந்து செல்ல முடியாத நிலை இருப்பதால் மக்களின் அடிப்படை வசதி செய்துத்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

56) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. மா. திருஞானம் அவர்களின் தீர்மானம்</u>

37வது கோட்டம் பகுதியில் உள்ள குட்டிக்கரடு பகுதியில் செல்லும் வழியில் புதுப்பேட்டையில் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக கட்டப்பட்ட மேல்நிலை நீர்தேக்க டேங்க் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மேலும் இந்த டேங்க் அருகில் பொது கிணறு மற்றும் மின்சார உயர்மின் அழுத்த கம்பம் உள்ளது. இந்த டேங்க் இடியும் நிலை ஏற்பட்டால் உயிர் சேதம் மற்றும் அரசின் பொருள் சேதம் ஏற்படும் மேலும் இந்த டேங்க் குடிதண்ணீர் பயன்பாட்டில் பல வருடங்களாக இல்லாத காரணத்தால் டேங்க் அப்புறப்படுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

57) <u>திரு.த.தனசேகர், அம்மாபேட்டை வார்டு குழுத்தலைவர் (38வது கோட்டம்) அவர்களின் தீர்மானம்</u>

38வது கோட்டத்தில் கீழ்க்கண்ட தெருக்கள் சாக்கடைகள் மிகவும் சேதமடைந்து உள்ளது.

1. வைத்தி உடையார் காடு, முனியப்பன் கோவில் அருகில் உள்ள சாக்கடை மற்றும் சாலை வசதி செய்தல்.
2. தியாகி நடேசன் தெரு.2ல் சாலை வசதி, சாக்கடை வசதி மற்றும் தெருவிளக்கு வசதி செய்தல்.
   மேற்படி பணிகள் செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

58) <u>42வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திருமதி க.மு. மஞ்சுளா அவர்களின் தீர்மானம்</u>

தீர்மானம்.1. சேலம் மாநகராட்சி 42வது கோட்டம் காளிதாசர் தெரு சாலை அமைக்கும் பணி கிட்டதட்ட 3.5 வருடமாக மந்த நிலையில் நடைபெற்று வருகிறது. இதை கான்கிரீட் சாலையாக மாற்றி விரைந்து சாலை அமைக்க நடவடிக்கை எடுத்தல்.

தீர்மானம்.2. சேலம் மாநகராட்சி 42வது கோட்டம் சன்னியாசிகுண்டு ரோடு மற்றும் சன்னியாசிகுண்டு மெயின் ரோடு கிட்டதிட்ட 3 வருடமாக சாலை அமைக்கும் பணி மந்த நிலையில் நடைபெற்று வருகிறது. இந்த சாலையையும் விரைந்து போட நடவடிக்கை எடுத்தல்.

தீர்மானம்.3. சேலம் மாநகராட்சி 42வது கோட்டத்தில் தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. பொதுமக்களின் சுகாதார வாழ்வை உறுதி செய்திட 42வது கோட்டத்திற்கு இன்னும் கூடுதலாக 15 தூய்மை பணியாளர்களை நியமித்தில்.

தீர்மானம்.4. சேலம் மாநகராட்சி 42வது கோட்டத்தில் தளவாட சாமான்கள், குப்பை அள்ளிச்செல்ல இரண்டு சக்கரவண்டி 5 மற்றும் மம்முட்டி ஆகியவற்றை சுகாதார பணி சிறப்பாக நடைபெற போதுமான அளவு ஒதுக்கி வழங்குதல்.

தீர்மானம்.5. சேலம் மாநகராட்சி 42வது கோட்டத்தில் பாவடி பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு தலைமை ஆசிரியர் அறை மற்றும் பெண் குழந்தைகள் பயன்படுத்தும் கழிப்பிடங்கள் ஆகியவற்றை மராமத்து பணிகள் செய்தும் புதிய கழிப்பிடங்களை கட்டுதல்.

தீர்மானம்.6. சேலம் மாநகராட்சி 42வது கோட்டத்தில் காந்திமகான் தெரு மற்றும் நாராயணநகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு இரண்டு அமைத்தல்.

தொடர்ச்சி..

தீர்மானம்.7. சேலம் மாநகராட்சி 42வது கோட்டத்தில் புதியதாக 5 கம்பங்கள் நட்டு தெருவிளக்குகள் அமைத்தல்.
தீர்மானம்.8. சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டலத்திற்கு உட்பட்ட வணிக வளாகத்தில் சுமார் 150 கடைகள் வெகு நாட்களாக காலியாக உள்ளது. இதன் வாடகையை குறைத்தால் 150 கடைகளும் உடனடியாக வாடகைக்கு விடலாம். இதனால் மாநகராட்சிக்கு வருவாய் கூடும். எனவே வாடகையை குறைக்க வழிவகை செய்தல்.
தீர்மானம்.9. அம்மாபேட்டை டேங்கிலிருந்து தண்ணீர் திறக்கும் பொழுது 3 வார்டுகளுக்கு தண்ணீர் திறக்கபடுவதால் 42வது கோட்டத்திற்கு தண்ணீர் வருவதில்லை. எனவே 15வது நிதி குழுவின் CFT நிதியின் கீழ் அம்மாபேட்டை மெயின் ரோட்டிலிருந்து ராமசுந்தரம் தெரு வழியாக ஹவுசிங் போர்டு வரை 10 இன்ச் CI அமைத்து கொடுத்து 1 கன்ட்ரோல் வால்வ் அமைத்தல். கூடுதலாக 42வது கோட்டத்திற்கு 10 கன்ட்ரோல் வால்வுகள் அமைத்தல்.
மேற்படி பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

59) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகரத்தில் பிளாஸ்டிக் பயன்பாடு என்பது அதிகரித்து, தூய்மை பணியிலும், சுகாதார பணியிலும் மிகுந்த சவாலை ஏற்படுத்துவதால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் கேரி பேக் தயாரிக்கும், விற்பனை செய்யும் கடைகளின் உரிமையாளர்களின் லைசென்சை இரத்து செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

60) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்</u>

44வது கோட்டத்தில் உள்ள அங்கன்வாடி மையங்கள் எண்.309, 310, 311, 312, 313, 314, 315 ஆகியவை மிகவும் பழுதடைந்து உள்ளதால் உடனடியாக தகுந்த நிதி ஒதுக்கீடு செய்து அந்த அங்கன்வாடி மையங்கள் சீரமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

61) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்</u>

44வது கோட்டத்தில் உள்ள சேலம் மாநகராட்சி எருமாபாளையம் நடுநிலைப்பள்ளியில் போட்டி தேர்வுக்கான இலவச பயிற்சி மையத்தை துவங்கிட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

62) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 44வது கோட்டத்தில் உள்ள தடைப்பட்டு பாதியிலேயே நின்று போன மின்சார மயானத்தை உடனடியாக துவங்க தகுந்த நிதி ஒதுக்கீடு செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

63) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்</u>

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் ஒரு விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபட போவதாக அறிவித்துள்ளதால், சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதியில் களரம்பட்டி மெயின்ரோட்டில் 44வது கோட்டத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தி நிதி ஒதுக்கீடு செய்ய தமிழக அரசை வலியுறுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

64) 44வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்

சேலம் மாநகராட்சி 44வது கோட்டத்தில் அமைந்துள்ள ஸ்ரீ விஜய கணபதி தெருவின் பின்புறம் இடம் பெற்றுள்ள தனியார் தினசரி பத்திரிக்கை நிறுவனத்திற்கு சொந்தமான இடத்தில் அசுத்தமாக்கி பாம்பு போன்ற நச்சு நிறைந்தவைகள் இருப்பதால் உடனடியாக அந்த இடத்தை கள ஆய்வு செய்து நடவடிக்கை எடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

65) 44வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்

44வது கோட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் சாக்கடை இடிந்து போயுள்ளதால் உடனடியாக சாக்கடை வசதி ஏற்படுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

66) 44வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்

சேலம் மாநகராட்சி 44வது கோட்டத்தில் OSCAR தியேட்டர் அருகே களரம்பட்டி மெயின் ரோட்டில் அமைந்துள்ள தண்ணீர் டேங்க் உள்ள மாநகராட்சி நிலத்தில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

44வது கோட்டத்தில் Ward AH, Block-3, T.S.No.2 என்கிற சர்க்கார் புறம்போக்கு நிலமானது சுமார் 2610 சதுரடி நிலமானது வாகனங்கள் எளிதில் வந்து செல்லும் வகையிலும், பொதுமக்கள் எளிதில் அணுகும் வண்ணம் உள்ளதால் 44வது கோட்டத்தில் கட்ட திட்டமிடப்பட்டுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை Ward AH, Block-3, T.S.No.2 என்கிற நிலத்தில் கட்டிடம் கட்ட, சேலம் மாவட்ட வருவாய் நிர்வாகத்திடம் இருந்து தடையில்லா சான்று பெற்று 44வது கோட்டத்தில் கட்டப்பட உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை Ward AH, Block-3, TS No.2 என்கிற சர்கார் புறம்போக்கு நிலத்தில் கட்ட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

67) 44வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்

சேலம் மாநகராட்சி 44வது கோட்டத்தில் புதிய தூய்மை பணியாளர் குடியிருப்பு பகுதியில் பொதுமின்விளக்குகளுக்கான கம்பங்களும், பொது மின் விளக்குகளுக்கான இணைப்புகளும், ஒயரிங் செய்யப்படாமல் பல்வேறு குற்ற சம்பவங்கள் நடைபெற்று வருவதால் உடனடியாக மின்விளக்குகளுக்கான ஏற்பாடு செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

68) <u>45வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திருமதி செ.சுகாசினி அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி மண்டலம் 45வது வார்டுக்குட்பட்ட இந்திராநகரில் உள்ள ஏரியை தூர்வாரி பல வருடங்கள் ஆகிறது. மேற்படி ஏரியை தூர்வார இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

69) <u>47வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திருமதி எஸ்.புனிதா அவர்களின் தீர்மானம்</u>

47வது கோட்டம் இராமலிங்கசாமி கோவில் தெருவில் 300 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் இங்கு பொது குடிநீர் குழாய் 4 மட்டுமே உள்ளது. இதனால் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. மேலும் தேவையான அளவு பொதுக்குடிநீர் குழாய் அமைத்து நீர் பற்றாக்குறையை போக்க வேண்டும்.

பி.ஜி.ஆர். தெரு, முருகன் தெரு, கல்லறைத்தெரு போன்ற தெருக்களில் பொது குடிநீர் குழாய் 40 வருடங்கள் பழமையானது. அடிக்கடி பழுதடைந்து விடுகின்றது. இதனால் தண்ணீர் தட்டுப்பாடும், தண்ணீரில் சாக்கடை கழிவுநீர் கலந்து விடுகின்றது. இப்பகுதி முழுவதும் புது பைப்லைன் வசதி செய்திடவும், 47வது கோட்டம் முழுவதும் பல பகுதிகளில் போர்வெல் வசதி செய்திடவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

70) <u>47வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திருமதி எஸ்.புனிதா அவர்களின் தீர்மானம்</u>

கீழ்க்கண்ட தெருக்களில் சாக்கடை கழிவுநீர் வசதி மற்றும் சாலை வசதி அமைத்திடல், கல்வெட்டு வசதி அமைத்திடல்.

1. சிங்காரபேட்டை மார்கெட் தெரு
2. சிங்காரபேட்டை புதுத்தெரு
3. சிங்காரபேட்டை தெற்கு தெரு
4. இராமலிங்கசாமி கோவில் தெரு
5. முருகன் நகர்
6. அன்னதானப்பட்டி ஏரி தெரு–2
7. முள்ளுவாடி தெற்கு தெரு
8. அம்பேத்கார் தெரு 1, 2, 3
9. அன்னதானப்பட்டி ஏரி தெரு–1
10. அன்னதானப்பட்டி திருச்சி கிளை ரோடு

மேற்கண்ட பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

71) <u>47வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திருமதி எஸ்.புனிதா அவர்களின் தீர்மானம்</u>

சுதந்திர இந்தியாவின் காலம் முதல் இதுநாள் வரை அம்பேத்கர் தெரு 1, 2, 3ல் சுமார் 300 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்கள் தங்கள் காலைக்கடனை கழிப்பதற்கு 55வது டிவிசனில் இருக்கும் பொதுக்கழிப்பிடத்திற்கு செல்கின்றனர். இரண்டு மெயின் ரோடு, இரண்டு சிக்னல் தாண்டியும், சிறியவர் முதல் பெரியவர் வரை செல்கின்றனர். இப்பகுதியில் பொதுக்கழிப்பிடம் கட்ட அரசு புறம்போக்கு நிலம் உள்ளது. அதன் சர்வே எண்.29 இவை தனிப்பட்ட நபர் ஒருவரின் ஆக்கிரமிப்பிலும் கடைகள் வைத்து வாடகைக்கும் விட்டு வருகின்றனர். (அரசு புறம்போக்கு நிலத்தில் மக்கள் வசிக்கும் இடத்தை தவிர்த்து) வியாபார நோக்கில் பணம் சம்பாதிக்கும் கடைகளை அகற்றி அங்கு பொது கழிப்பிடம் கட்டிடத் தந்தால் இம்மக்களின் நூறு ஆண்டு பிரச்சனை தீரும். மேற்படி பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்றி அவ்விடத்தில் கழிப்பிடம் கட்ட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

72) <u>திரு.மா.அசோகன், கொண்டலாம்பட்டி வார்டு குழுத் தலைவர் (52வது கோட்டம்) அவர்களின் தீர்மானம்</u>

கொண்டலாம்பட்டி மண்டலத்திற்குட்பட்ட கோட்டம் 45 முதல் 60 வரை உள்ள 16 கோட்டங்களிலும் கோட்டத்திற்கு தலா 50 லைட் வீதம் 800 லைட் (90 வாட்ஸ் LED) பொருத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

73) <u>திரு.மா.அசோகன், கொண்டலாம்பட்டி வார்டு குழுத் தலைவர் (52வது கோட்டம்) அவர்களின் தீர்மானம்</u>

52வது கோட்டத்திற்குட்பட்ட சண்முகாநகர் குறுக்கு தெரு 1, 2, 3 (தென்றல் கல்யாண மண்டபம் தெரு) ஆகிய பகுதிகளில் வடிகால் மற்றும் சாலை அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

74) <u>53வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திருமதி எஸ். ஷாதாஜ் அவர்களின் தீர்மானம்</u>

53வது டிவிசனுக்குட்பட்ட 1) அன்னதானப்பட்டி, நடேசன் பிள்ளை சந்து, 2)வள்ளுவர்நகர், 2வது, 3வது தெருக்களின் குறுக்கு சந்து, 3) அன்னதானப்பட்டி காவல் நிலையம் அருகில் முனியப்பன் கோவில் சந்து ஆகிய மூன்று சந்துகளுக்கு சாக்கடை மற்றும் சிமெண்ட் சாலை வசதி செய்து தரவும், இந்த மூன்று சந்துகளில் உள்ள பொதுமக்கள் பல வருடங்களாக சாலை வசதிக்கோரி போராடி வருகிறார்கள். எனவே, இந்த மூன்று சந்துகளும் சிமெண்ட் சாலைகளாக மாற்றி அமைத்திடவும்,

மேலும் 53வது வார்டில் 36 தெருக்களுக்கு சாக்கடை வசதி மிக மோசமாக உள்ளதால், புதியதாக சாக்கடை வசதி அமைத்திடவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

75) <u>55வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திருமதி எஸ். தனலட்சுமி அவர்களின் தீர்மானம்</u>

55வது கோட்டத்தில் மேட்டுத்தெருவில் இலவச கழிப்பிட வசதி இரண்டு உள்ளது. அதில் ஒன்று பொதுமக்கள் பயன்பாட்டுக்கு இல்லாமல் இருக்கிறது. எனவே, இந்த கழிப்பிடத்தை இடித்து ஆரம்ப சுகாதார நிலையம், வார்டு அலுவலகம் இவை இரண்டும் பொது மக்கள் நலன் கருதி அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

76) <u>56வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு.ஆ.ச. சரவணன் அவர்களின் தீர்மானம்</u>

56வது கோட்டத்தில் சாலை அமைத்தல்

1. மு.சு. காடு 2 – நம்பர் தெரு, குறுக்கு தெரு
2. சங்கர் பிலிம்ஸ் ரோடு, (பத்ரி நகர்)
3. வடக்கு முனியப்பன் கோவில் தெரு – 1, 2, 3
4. வடக்கு முனியப்பன் கோவில் தெரு – குறுக்கு
5. கருங்கல்பட்டி 1, 2வது தெருக்கள்

ஸ்மார்ட் திட்டம் மூலம் சாலை அமைக்க குழி தோண்டி பாதி நிலையில் ஜல்லி போட்டு பல மாதங்களாக உள்ளது. அந்த தெருக்களில் உள்ள பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர். ஆகவே இந்த தெருக்களில் தார்சாலை அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

77) <u>58வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. ரா.கோபால் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 58வது கோட்டத்திற்கு உட்பட்ட பொம்மனச்செட்டிக்காடு, மாகாளியம்மன் கோவில் தெரு, பாட்டப்பன் காடு, கற்பகவிநாயகர் தெரு மற்றும் இரட்டைக்கிணறு வீதி ஆகிய பகுதிகளில் சிறுபாலங்கள் (கல்வெர்ட்) அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

78) <u>58வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. ரா.கோபால் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 58வது கோட்டத்திற்கு உட்பட்ட கணபதி நகர் மற்றும் புத்து முனியப்பன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் தார்சாலை, சிமெண்ட் ரோடு மற்றும் மழைநீர் வடிகால் அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

79) <u>58வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. ரா.கோபால் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 58வது கோட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மின்கம்பம் அமைத்து மின்விளக்கு அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

80) <u>59வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. பெ.முருகன் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 59வது கோட்டம் நெசவாளர் காலனி 94.நெ.கொண்ட வீட்டில் வசித்து வரும் பலராமன் என்பவர் மாநகராட்சிக்கு சம்பந்தப்பட்ட இடத்தையும் சேர்த்து ஆக்கிரமிப்பு செய்து உள்ளார். இது தொடர்பாக ஏற்கனவே மாநகராட்சியில் மனு கொடுக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி நில அளவையாளர் அளவிட்டு மாநகராட்சி இடத்தை மார்க்–இட்டு சென்றனர். இதனை அழித்து விட்டு கட்டிடத்தை கட்டி வருகின்றனர்.

எனவே, அப்பணியினை உடனடியாக நிறுத்தி, மாநகராட்சிக்கு சம்பந்தப்பட்ட இடத்தை தனிநபர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ப மாற்றிட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

81) <u>59வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. பெ.முருகன் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட 59வது கோட்டம் இராமையன் காடு பகுதியில் உள்ள இடுகாடு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதனை சுற்றியுள்ள பகுதியான பெருமாள் கோவில் மேடு, இராமையன் காடு, சீலநாயக்கன்பட்டி, சிவசக்தி நகர், பாரதி நகர், இந்திராநகர், காந்தி நகர் மற்றும் அரசமரத்து கரட்டூர் போன்ற ஊர்களுக்கு இதுதான் இடுகாடு ஆகும். சடலத்தை புதைக்க ஒரு அடி குழி பறிக்கும் பொழுதே தண்ணீர் மேலே வந்து விடுவதால், குழி பறித்து சடலத்தை புதைக்க மிகமிக இடையூறாக உள்ளது.

எனவே, அப்பகுதி பொதுமக்கள் இடையூறின்றி சடலங்களை புதைக்க ஏதுவாக மேற்படி இடுகாட்டை உடனடியாக சரிசெய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

82) <u>59வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. பெ.முருகன் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட 59வது கோட்டம் எஸ்.வி.ஆர். காலனி பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான 24,000 சதுரடி அளவுள்ள காலி இடம் உள்ளது. இந்த இடத்தை அளவீடு செய்து.

1. 1ம் வகுப்பில் இருந்து 8ம் வகுப்பு வரை மாநகராட்சி பள்ளி அமைக்கலாம்.
2. பூங்கா அமைத்து பொதுமக்கள் நடைபயிற்சி மற்றும் குழந்தைகளுக்கு சுகாதாரமான பொழுதுபோக்கு அமைவிடமாக பயன்படுத்தலாம்.
3. சத்துணவு பள்ளி அமைத்து செயல்படுத்தலாம்.
4. நியாய விலை கடை அமைத்து பொதுமக்களின் சிரமத்தை போக்கலாம்.
5. மாநகராட்சி அலுவலகம் அமைக்கலாம்.

   பொதுமக்களின் நலன் கருதி இதுபோன்று பல்வேறு பயன்பாட்டிற்கு பயன்படக்கூடிய மேற்படி காலி இடத்தை ஆய்வு செய்து ஏதேனும் ஒரு பணிக்கு பயன்படுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

83) <u>60வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. செ.ஆ.வரதராஜ் அவர்களின் தீர்மானம்</u>

வார்டு 60 சின்னையன் காலனி, மதுரவீரன் நகர் குறிஞ்சிநகர் ஓடையில் மழைக்காலத்தில் மூன்று அடி தண்ணீர் வீடுகளுக்குள் புகுந்து சேதமடைகிறது. எருமாபாளையம் ரோடு தண்ணீர், அம்மாள் ஏரி தண்ணீர், ஊத்துமலை தண்ணீர் தலைமலைநகர் தண்ணீர், தாதகாப்பட்டி கேட் தண்ணீர், 59வது வார்டு தண்ணீர், கரட்டூர் தண்ணீர், சீலநாயக்கன்பட்டி ஊருக்குள் இருந்து வரும் தண்ணீர் முழுவதும் மூன்று ஏரியாவிலும் புகுந்து சேதப்படுத்துகிறது. அதனால் அங்குள்ள ஓடையை அகலப்படுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

84) <u>60வது கோட்ட மாமன்ற உறுப்பினர், திரு. செ.ஆ.வரதராஜ் அவர்களின் தீர்மானம்</u>

1. வெடுப்புக்கல்பாறை முழுவதும் ரோடு, டிச்சி.
2. சுபாஸ்சந்திரபோஸ் கான்கிரீட் ரோடு, டிச்சி மூன்று வீதி.
3. எம்.கே.நகர் தார்ரோடு, டிச்சி முழுவதும்.
4. மதுர வீரன் நகர் இரண்டு வீதி டிச்சி.
5. மதுர வீரன் நகர் குறுக்கு வீதி கான்கிரீட் வீதி.
6. சின்னையன் காலனி இரண்டு வீதி ரோடு, டிச்சி.
7. கோவிந்தம்மாள் நகர் ரோடு, டிச்சி.
8. குமரன் நகர் ரோடு, டிச்சி.
9. கருப்பசாமி கோவில் ரோடு, டிச்சி.
10. அழகுநகர் ரோடு, டிச்சி முழுவதும்.
11. சாமியாப்பாநகர் ரோடு, டிச்சி முழுவதும்.
12. சீலநாயக்கன்பட்டி, மாரியம்மன் கோவில் மெயின் ரோடு, டிச்சி முழுவதும் அகலப்படுத்துதல்.
13. மாரியம்மன் கோவில் தெற்கு மூன்று வீதி ரோடு, டிச்சி.
14. பொன்னுசாமி தெரு 1வது தெரு, 2வது வீதி, 3வது வீதி ரோடு டிச்சி முழுவதும் பழுதடைந்து உள்ளது.
15. மாரியம்மன் கோவில் வடக்கு வீதி இரண்டு தார்ரோடு முழுவதும் பழுதடைந்து உள்ளது. உடனடியாக ரோடு சரிசெய்தல்.

மேற்படி பணிகளை செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**85)** சேலம் மாவட்டம், சேலம் மாநகராட்சி கோட்டம் எண்.21ல் சேலம் மேற்கு வட்டம், 67 அரியாகவுண்டப்பட்டி கிராமம். பழைய புல எண்.22/1க்கு தற்போதைய புதிய நகர அளவைப்படி வார்டுQ, பிளாக் 3, நகர புல எண்.2/1 "தோப்பு" என வகைபாடு செய்யப்பட்ட அரசு புறம்போக்கு நிலத்தின் மொத்த விஸ்தீர்ணம் வெறக்டர் 0.6500.0 ச.மீ நிலத்தில் 0.4860.0 ச.மீ நிலத்தினை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகத்தின் சார்பில் " வெள்ளி கொலுசுகள் உற்பத்தியாளர்கள் பல்நோக்கு கட்டிடம் " கட்டுவதற்கு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகத்தின் நிறுவனத்திற்கு நிலமாறுதல் செய்யும் பொருட்டு பிரஸ்தாப புலம் சேலம் மாநகராட்சி எல்லைக்குள் அமைவதால் மாநகராட்சியின் கருத்திசைவினை வழங்கக் கோரிய மாவட்ட வருவாய் கோட்டாச்சியர் அவர்களின் கடிதம் ந,.க.எண்.566/2022/ஆ2 நாள்.22.03.2022 மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்(பொ) அவர்களின் கடிதம் ந.க.எண்.2465/2022/இ5, நாள் 29.04.2022ன்படி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மாவட்ட வருவாய் கோட்டாச்சியர் அவர்களுக்கு இம்மாநகராட்சி கடிதம் எண். ந.க.எண். இ9/004397/2022, நாள்.13.05.2022ம் தேதி வழங்கப்பட்ட தடையின்மை சான்றுக்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

தடையின்மைச் சான்று வழங்கப்பட்ட நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(இ9/4397/2022)

தீர்மானம். அங்கீகரிக்கப்பட்டது.

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்
மேயர்
சேலம் மாநகராட்சி.

சேலம்–1.
26–05–2022.